# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம் வெள்ளி, ஏப்பிரல் 19 2019. இதழ் - 60

அரங்கம்
அரங்கம் பத்திரிகையில் விளம்பரம் செய்ய
சிறப்புத் தள்ளுபடி!
கால்பக்கம் - ரூபா 2500
அரைப்பக்கம் - ரூபா 5000
முழுப்பக்கம் - ரூபா 10,000
சிறுவிளம்பரங்கள் - ரூபா 200 மாத்திரமே

### ‘‘தெத்தாதே உஞ்சில் தெத்தாதே!’’

புத்தாண்டு இனிதே கடந்து விட்டது. இன்னொரு ஆண்டு. இன்னொரு வயது. இந்தக் கட்டுரையாளனுக்கு வயது இப்போது முப்பதை அண்மிக்கிறது.

பக்கம் - 06



### பிள்ளையானைப் பார்த்தேன்!


இந்தத் தலைப்பைப் பார்த்தவுடன் “கண்டேன்

பக்கம் - 03



### சித்திரை வருஷமா? சிங்கள தமிழ் புத்தாண்டா

பக்கம் -09



### மகாவம் சத்தை மீட்ட வில்லெம்கைகர்

இலங்கையின் வரலாற்றில் வில்லெம் கைகர் 1856-1943)

பக்கம் - 07



## கல்முனை வடக்கு பிரதேசசெயலக தரமுயர்த்தலுக்கு ஒத்துழைக்குமாறு அமைச்சர் ஹக்கீமுக்கு கல்முனை விகாராதிபதி வேண்டுகோள்!

### அன்றேல் சாகும்வரை போராடுவோம் என எச்சரிக்கை

(காரைதீவு சகா)

‘ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப்ஹக்கீமிடம் அன்பான, தயவான வேண்டுகோளை விடுக்கிறோம். அதாவது கல்முனையின் நிலையான அபிவிருத்தி தமிழ் - முஸ்லிம் இனஜக்கியம், எதிர்கால அமைதி, சமாதானம் கருதி கடந்த 30 வருடகாலமாக இழுத்தடிக்கப்பட்டுவரும் கல்முனை வடக்கு பிரதேச செயலக தரமுயர்த்தலுக்கு ஒத்துழைப்பு நல்குமாறு அன்போடு வேண்டுகிறோம்.’

இவ்வாறு கல்முனை சுபத்ராராமய விகாராதிபதி வண. ரண்முத்துகல சங்கரத்ன தேரர் வேண்டுகோள்விடுத்தார்.

கல்முனை வடக்கு பிரதேசசெயலக தரமுயர்த்தல் விவகாரம் நாளுக்குநாள் விஸ்வருபமெடுத்து வருவதையொட்டி அவர் இந்த வேண்டுகோளை ஊடகங்கள் வாயிலாக விடுத்துள்ளார்.

‘கல்முனையிலுள்ள ஒரு மதத்தலைவர் என்ற ரீதியில் இந்த பகிரங்க வேண்டுகோளை விடுக்கிறேன். அமைச்சர் இந்த விடயத்தில் ஒத்துழைப்பு நல்குவதில் தயக்கம் காட்டினாலோ அல்லது தவறினாலோ நாம் சாகும்வரை போராட்டத்திலீடுபட வேண்டிநேரிடும்’ என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

‘1989களில் இருந்து கல்முனை வடக்கு பிரதேச செயலகம் இனமதபேதமின்றி அந்தப்பகுதி மக்களுக்கான சேவையை வழங்கிவருகிறது. எனினும் காணி நிதி விடயங்களில் மட்டுப்படுத்தப்பட்டளவு அதிகாரத்துடன் இருப்பதால் அதனை முழுமையான செயலகமாக தரமுயர்த்த வேண்டுமென்று அந்தமக்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்துவருகின்றனர்.

ஆனாலும் தொடர்ச்சியாக இதற்கு முட்டுக்கட்டை போட்டவண்ணம் ஒருசிலர்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

பத்து உயிர்கள் என்பது பத்தாயிரம் கனவுகளுடன் கூடியவை. அனைத்தும் அழிந்து போயுள்ளன.

வாகன விபத்து என்பது எமது நாட்டுக்கு புதிது அல்லதான். எல்லோரும் எவ்வளவோ கூறுகிறோம், எழுதுகிறோம். நாமும் அரங்கத்தில் வாகன விபத்தையொட்டி ஆசிரியர் தலையங்கள் எழுதுவது கடந்த ஒரு வருட காலத்தில் இது இரண்டாவது தடவை.

விசாரணைகள் இன்னமும் முடிவடையவில்லை.

ஆனால், போக்குவரத்தின்போது பெரும்பாலான விபத்துக்கள் ஓட்டுநரின் தவறுகளாலேயே நடக்கின்றன. வானை ஓட்டியவரின் வயது சிறிது என்றே கூறப்படுகின்றது. பாதை தவறிச் சென்றதாகவும் ஊகங்கள் கூறுகின்றன.

எது எப்படியிருந்தாலும் போனது பத்து உயிர்கள். 3 வயது இரட்டைக் குழந்தைகள்



## பயணம் தொடர, பாதையில் கவனம்!

சீவகன் பூபாலரட்ணம்

ஆனால், மாற்றம் ஏதும் ஏற்படவில்லை.

இப்போது, மஹியங்கனைப் பகுதியில் வான் விபத்து. மட்டக்களப்பைச் சேர்ந்த 10 பேர் பலி. அத்தோடு புத்தாண்டை ஒட்டிய காலத்தில் விபத்துக்களில் 42 பேர் பலி.

மஹியங்கனை விபத்துக்கான காரணம் ஓட்டுனர் நித்திரையானது என்ற சந்தேகத்தை போலிஸார் சொன்னாலும்.

வேறு. பெறுமதி மிக்க உயிர்கள். இது போர் கடந்துபோன பூமிதான். ஆனால், இப்படியான காரணங்களால் மக்கள் உயிரிழப்பது குறைந்தபாடில்லை.

வீதிகள் போதுமான பாதுகாப்பைக் கொண்டவை அல்ல என்ற குறைபாடும் உண்டு. முக்கியமாக இரட்டை வழிப்பாதை மற்றும் பல் தடங்கள் வீதிகளில் கிடையாது. அதேவேளை, வீதி பாதுகாப்பற்றது என்றால் ஓட்டுநகர்கள்

தொடர்ச்சி... (பக்கம் -15 )



## கல்முனை வடக்கு பிரதேச செயலக தரமுயர்த்தகோரும் கையெழுத்து சேகரிப்பில் மூவின மக்களும் பங்கேற்பு!



(காரைதீவு நிருபர் சகா)

பல தசாப்தங்களாக தரமுயர்த்தப்படாமல் உள்ள கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை(தமிழ்) தரமுயர்த்தி தருமாறு அரசாங்கத்தை கோரும் கையெழுத்து சேகரிப்பு கல்முனை பிரதேசத்தில் இடம்பெற்றது.

கல்முனை பிரதேச பொதுமக்கள், பொது அமைப்புக்கள், இளைஞர்கள் இணைந்து கையெழுத்துச் சேகரிக்கும் முன்னெடுப்பை மேற்கொண்டிருந்தனர்.



இதில் கல்முனை பிரதேசத்தில் வசிக்கும் மூவின பொதுமக்களும் (தமிழ், சிங்களம், முஸ்லிம்) மதகுருமாரும் பங்குபற்றி, இந்த நியாயமான கோரிக்கைக்கு நீதி கோரி கையெழுத்திட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இன்றையதினம் தமிழ், சிங்கள, மக்களின் புத்தாண்டு தினமாக இருந்தபோதும் பெருமளவான மக்கள் இந்த அறவழிப்போராட்டத்தில் பங்கெடுத்திருந்தமையை அரசாங்கம் கவனத்தில் எடுத்து நீண்டகால கோரிக்கையை காலம் தாழ்த்தாது விரைவாக நிறைவேற்ற வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பாப்பாகும்.

கையெழுத்துச் சேகரிப்புக்கள் சேனைக்குடியிருப்பு காளி கோவில் முன்பாகவும் பாண்டிருப்பு கடற்கரை திடலிலும் இடம்பெற்றன.

கல்முனை வடக்கு பிரதேச செயலக



தரமுயர்த்தல் கோரிக்கை அடங்கிய மனு, கையெழுத்துகளுடன் எதிர்வரும் 21 ஆம் திகதி தமிழ் உணர்வாளர்கள் அமைப்பால் நடை பவனியாக மட்டக்களப்பில் இருந்து ஆரம்பித்து 22 ஆம் திகதி அம்பாறை கச்சேரிக்கு அமைதியான முறையில் சென்று கையளிக்கப்படவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## இலங்கையரின் முதல் செய்மதி



இலங்கைப் பொறியியலாளர்கள் இருவரினால் நிர்மாணிக்கப்பட்ட "ராவணா-1" செய்மதி வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டுள்ளது.

இலங்கையர்களால் தயாரிக்கப்பட்ட முதலாவது செய்மதி இது என்பது குறிப்பிடத்தக்கது.

வியாழனன்று அதிகாலை 2.18 மணிக்கு அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து இந்தச் செய்மதி ராக்கட்டுகள் மூலம் கொண்டு செல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் - வெர்ஜினியா பிராந்தியத்தில் உள்ள நாசா விண்வெளி ஆய்வு மையத்தில இருந்து வெற்றிகரமாக சர்வதேச விண்வெளி மையத்திற்கு குறித்த செய்மதி கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

ராவணா-1 செய்மதியை இலங்கைப் பொறியியலாளர்களான தரிந்து தயாரத்ன மற்றும் துலானி சாமிகா ஆகிய இருவர் இணைந்து நிர்மாணித்துள்ளனர்.

ராவணா - 1 செய்மதியானது, ஆயிரம் கனசென்றிமீற்றர் நீளமும் 1.05 கிலோ கிராம் நிறையும் கொண்டதாகும்.

ராவணா - 1 செய்மதியானது, சர்வதேச விண்வெளி மையத்திற்கு கொண்டுசெல்லப்பட்டதன் பின்னர், எதிர்வரும் மே மாத இறுதியில் அல்லது ஜூன் மாத ஆரம்பத்தில் விண்ணில் நிலைநிறுத்தப்படவுள்ளது.

இவ்வாறு விண்ணில் நிலைநிறுத்தப்பட்டதன் பின்னர், செக்கனுக்கு 7.6 கிலோமீற்றர் வேகத்தில் நாளொன்றுக்கு 15 தடவைகள் பூமியை சுற்றி வரவுள்ளது.

## மஹியங்கனை விபத்தில் இறந்தவர்களின் இறுதி நிகழ்வுகள்



மஹியங்கனையில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த 10 பேரினதும் உடல்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவர்கள் அனைவரும் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள்.

இவர்களின் இறுதி நிகழ்வுகள் வியாழனன்று மட்டக்களப்பில் நடைபெற்றன.

திடீர் மரண பரிசோதனைகளின் பின்னர் நேற்று முந்தினம் இரவு சடலங்கள் ஒப்படைக்கப்பட்டதாக மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

வேன் ஒன்று தனியார் பஸ் ஒன்றுடன் புதனன்று (17) அதிகாலை 1.30 மணியளவில் மோதி ஏற்பட்ட விபத்தில் மட்டக்களப்பை சேர்ந்த இந்தப் 10 பேரும் உயிரிழந்தனர்.
விபத்தில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த இரட்டைக் குழந்தைகள் உட்பட 10 பேர் உயிரிழந்தமை மட்டக்களப்பு மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

கல்லடி டச்பாரைச் சேர்ந்த யூட் ஹென்றிக்(வயது-44), கிரசன்சியா ஹென்றிக் (வயது-42), சாரதியான ஹெய்டன் ஹென்றிக்(வயது-19), செரேபி ஹென்றிக்(வயது-10) மற்றும் மட்டக்களப்பு ஜெயந்திபுரத்தில் உள்ள ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களான தந்தை சில்வியா யோப்ஸ் (வயது -52), மனைவி ரெலின்டன் யொப்ஸ்(வயது-

தொடர்ச்சி... (பக்கம் -15 )

## இளம் திறமைகளுக்கு களம் வழங்கும் "மட்டு முயற்சியாண்மை - 2019"



இளம் தொழில் முனைவோருக்கு ஊக்கம் தரும் வகையில் மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் மட்டு முயற்சியாண்மை -2019 என்னும் பெயரில் ஒரு விற்பனைக் கண்காட்சியை மட்டக்களப்பு மாவட்டச் செயலகம் ஏற்பாடு செய்துள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் மா. உதயகுமார் அறிவித்தார்.

மட்டக்களப்பு சிவானந்தா கல்லூரி மைதானத்தில் ஏப்ரல் 18 இல் ஆரம்பமான கண்காட்சி 20ஆம் திகதி வரை தொடர்ந்து நடக்கும்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 75 தொழில் முயற்சியாண்மையாளர்கள் இதில் பங்கேற்கிறார்கள்.

18 முதல் 45 வயது வரையிலான இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் இந்தக் கண்காட்சியில் பெண்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும் ஊக்கம் வழங்கப்பட்டுள்ளது. பெறுமதியேற்றம் செய்யப்பட்ட உற்பத்தி பொருட்களுக்கான சந்தை வாய்ப்பு, விளம்பர வசதி, விநியோக வசதிகளுக்கான ஏற்பாடுகளுக்கான ஒரு மையமாக இந்த விற்பனைக் கண்காட்சி அமையும் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும், மாவட்டத்துக்கு வெளியுள்ளவர்களின் தொடர்புகளை முயற்சியாண்மையாளர் இதன் மூலம் பெறலாம் என்றும் உதயகுமார் தெரிவித்தார்.

சிறிய, நடுத்தர முயற்சியாளர்களை ஊக்குவிப்பதே இந்த திட்டத்தின் நோக்கம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விற்பனைக் கண்காட்சிக்கு பெருமளவில் பொதுமக்கள் வரவேற்கப்படுகிறார்கள்.

## பெரியகல்லாற்றில் நள்ளிரவில் காரை வீட்டு மதிலுடன் மோதி விபத்து

(க.விஜயரெத்தினம்)



பெரியகல்லாறு ஊர் வீதியில் புதன்கிழமை(17) இரவு 11.30 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிக்குண்டு இரண்டு சிறுவர்கள் படுகாயமடைந்துள்ளதாக களுவாஞ்சிகுடி போக்குவரத்து பொலிசார் தெரிவிக்கின்றார்கள்.

பெரியகல்லாற்றைச் சேர்ந்த இராஜகுலேந்திரன் சஜீவதாஸ் என்பவர் தனது பிள்ளைகளுடன் வீட்டிலிருந்து புறப்பட்டு காரில் பெரியகல்லாறு வைத்தியசாலைப் பக்கம் சென்றுள்ளார். நித்திரையுடன் சென்றவர் எதிரே உள்ள வீட்டு மதிலுடன் கட்டுப்பாட்டையிழந்து மோதியுள்ளார். இதனால் கார் சேதமடைந்துள்ளதுடன் காரில் சென்ற தனது குழந்தைகள் படுகாயமடைந்து பிரதேசத்தில் உள்ள மருத்துவமனையில் சிசிச்சை அளிக்கப்பட்டு வீடு திரும்பியுள்ளார்கள்.

அரங்கம் பத்திரிகையில் விளம்பரம் செய்ய சிறப்புத் தள்ளுபடி!
கால்பக்கம் - ரூபா 2500
அரைப்பக்கம் - ரூபா 5000
முழுப்பக்கம் - ரூபா 10,000
சிறுவிளம்பரங்கள் - ரூபா 200 மாத்திரமே

# பிள்ளையானைப் பார்த்தேன்!



இந்தத் தலைப்பைப் பார்த்தவுடன் "கண்டேன் சீதையை" என்ற கணக்கில் தலைப்பு வைத்திருக்கிறார், அவரென்ன சீதையளவு உத்தமரா? இவரென்ன அனுமாரா என்ற மாதிரி பலர் நினைக்கலாம். ஆனால், அவர்களை என்னால் எதுவும் செய்ய முடியாது. அவர்கள் அப்படியேதான் இருப்பார்கள்.

ஆனால், பிள்ளையானைப் பார்த்ததும் அவருடன் பேசியதும் நான் அதிசயித்தேன். உண்மையில் இன்னுமொரு பெரிய தலைவரை நான் முதன் முதலில் பார்த்ததை இதனுடன் ஒப்பிட்டு எழுதத்தான் நினைத்தேன். ஆனால், நான் அப்படி எழுதியிருந்தால், நான் மேலே சொன்ன வகையறாக்கள் மேலும் மனம் நொந்துபோயிருப்பார்கள். அதனால், தவிர்க்கிறேன்.

சிவநேசதுரை சந்திரகாந்தன் என்ற பிள்ளையான் என்னைப் பொறுத்தவரை ஒரு சிறார் போராளி. 16 வயதில் தான் இயக்கத்தில் சேர்ந்ததாக அவரே சொன்னார். அவர் ஒரு சிறார் போராளி என்பதாலும், பிள்ளையான் என்று பெயர் இருந்த காரணத்தாலுமோ என்னவோ, அவர் ஒரு பதவிக்காலம் முழுவதும் கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சராக இருந்த பின்னரும் கூட அவர் பற்றிய பிரமாண்ட தோற்றம் எதுவும் எனமனதில் இருந்ததில்லை.

ஆனால், மட்டக்களப்பு சிறைச்சாலையில், சில நிமிட அனுமதியில் நான் பார்த்துப் பேசிய பிள்ளையான் நிச்சயமாக முதிர்ச்சியடைந்த ஒரு அரசியல்வாதி. இன்னமும் எதுவும் தெரியாத சிறார் போராளி என்றெல்லாம் என்னால் அவரைப் பார்க்க முடியவில்லை.

"புலவர்" என்ற பெயரைக் கொண்ட கிழக்குப் பிராந்திய கடற்படைத்துணைத்தளபதியாக இருந்த முன்னாள் போராளி ஒருவர் சொன்னது எனக்கு இப்போது ஞாபகம் வருகிறது. 'ஒவ்வொருவரும் எங்கெங்கோவெல்லாம், என்னென்னவோவெல்லாம் படித்திருப்பார்கள், ஆனால், என்னுடைய பல்கலைக்கழகம் இயக்கம்தான்' என்று அவரைச் செவ்வி கண்ட போது ஒரு தடவை கூறியிருந்தார். அது சரிதானோ என்றும் பிள்ளையானைச் சந்தித்த போது எண்ணத்தோன்றியது.

இதுதான் நான் பிள்ளையானைச் சந்தித்த முதல் தடவை. என்ன நடக்க வேண்டும் என்று நான் கேட்டதற்கு 'முதலில எங்கட மக்களை மாற்ற வேண்டும் அண்ணன்' என்றார். பொருளாதாரத்தை மாற்றணும், அரசியலை மாற்றணும் என்று அவர் கூறியிருந்தால், அது தவறான பதிலாக இருந்திருக்காவிட்டாலும், அது ஒரு சாதாரண பதிலாகத்தான் இருந்திருக்க முடியும். ஆனால், அவர் மக்களை மாற்றணும் என்று சொன்னதும், அதற்குச் சொன்ன காரணங்களும் அவர் பற்றிய மரியாதையை அதிகரிக்கச் செய்தது.

மாகாணசபைக்கு தலைமைமேற்றுச் செயற்பட்ட ஒரு பதவிக்காலம் பிள்ளையானை நன்கு புடம் போட்டிருக்கிறது. மாகாணத்தின், குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒவ்வொரு பகுதி பற்றியும் விரல் நுனியில் தகவல் வைத்துப் பேசுகிறார். எதனையும் வெட்டு ஒன்று துண்டு இரண்டாக பேசினாலும், சிக்கலுக்கு அல்லது இலகுவில் பதற்றத்தை தூண்டக்கூடிய விடயங்களில், 'தீவிரவாதியான' பிள்ளையானிடம் நான் எதிர்பார்த்ததற்கு மாறாக, அவர் நிதானமாகப் பேசுகிறார்.



அவரது அரசியல் கூட்டணி பற்றி நான் கேள்வியெழுப்ப, 'யாருடனும் கூட்டணி போடலாம் அண்ணன், ஆனால், நடக்கிறதை நாம தீர்மானிக்கக்கூடியதாக இருக்கணும், அவர்கள் போடும் தாளத்துக்கு நாம் ஆடமுடியாது. நமது பிரதேசத்தின் அபிவிருத்திக்கான திட்டத்தை நாமதான் போடணும், அடுத்தவர்கள் போடும் திட்டத்தை நாம் கையில் எடுத்து முழம் போடக்கூடாது' என்கிறார்.

தான் நிர்மாணிக்கத் தொடங்கிய மட்டக்களப்பு வாசிகசாலைக்கான கட்டிடம் பூர்த்தியாகாததமை குறித்து அவருக்கு ஏக்கம் இருக்கிறது. 'உண்மையில் அடுத்த தடவையும் நான்தான் பதவிக்கு வருவேன் என்று நினைத்துவிட்டேன். அதனால் அது தவறி விட்டது' என்கிறார். ஆனால், அவரது ஆட்சியில் கட்டப்பட்டு அரைவாசிக்கு மேல் நிர்மாணிக்கப்பட்ட அந்த வாசிகசாலை, இன்று அதன் பின்னரும் ஒரு பதவிக்காலம் முடிந்து பூர்த்தியாகாமல் இருப்பது கவலைக்குரியது. அடுத்த ஆட்சியில் இருந்தவர்கள், அந்த ஆட்சிக்கு ஆதரவு வழங்கியவர்களின் பொறுப்பு அது. ஆனால், இந்தக் கணம்வரை அது திறக்கப்படவில்லை.

இதேபோல படுவான்கரையில் உன்னிச்சைக்குளத்துக்கு ஒத்ததாக, பாவக்கொடிச்சேனை மற்றும் தாந்தாமலை ஆகியவற்றுக்கு அருகாக தான் நிர்மாணிக்கவிருந்த ஒரு "கனவுக் குளம்" பற்றியும் மிகவும் ஆர்வமாக விபரித்தார். அதனை நடத்தி முடித்திருந்தால் எல்லாம் சிறப்பாக நடந்திருக்கும் என்று அவர் ஆசை வார்த்தை கூறவில்லை. அதனை எப்படியாவது செய்தாகணும் என்றுதான் கூறினார்.

**சீவகன் பூபாலரட்ணம்**

சிறைக்கு பிள்ளையான் வந்த பிறகு சிறையும் அபிவிருத்தி அடைந்திருப்பதாக அங்கு சிலர் கூறக்கேட்டேன். மலசல கூடம் முதல் சிறைக்கு வெள்ளை பூசியது வரை பல அபிவிருத்திகளை அங்கு சுட்டிக்காட்டுகிறார்கள். 'பிள்ளையான் வந்ததால்தான் சிறைக்கும் அபிவிருத்தி' என்று ஒருவர் கூறியதை விளையாட்டாக எடுத்துக்கொண்டு போகமுடியவில்லை.

சிறை வாழ்க்கை பிள்ளையானுக்கு பொறுமையைக் கற்றுக்கொடுத்திருக்குமோ என்றும் எண்ணத்தோன்றுகிறது. 'இருக்கும் ஆட்சியை கவிழு' என்று அவர் பேசவில்லை. இருப்பவர்களை வைத்து காரியத்தை நடத்து என்று ஒருவருக்கு எனக்கு முன்னாலேயே ஆலோசனை கூறினார்.

அவரது வழக்கு ஒரு குற்றவியல் வழக்கு. அது தற்போது நீதிமன்றத்தில் இருக்கிறது. அதனால், அதனைப் பற்றி நான் இங்கு பேசுவது உசிதமல்ல. ஆனால், தன்னை தொடர்ச்சியாக 1000 நாட்களுக்கும் அதிகமாக தடுத்து வைத்திருப்பதில் அரசியல் இருக்குமோ என்ற சந்தேகம் அவருக்கு இருக்கிறது. பொதுவாக மக்கள் பலரும் இதே கருத்தை கூறுகிறார்கள்.

பிள்ளையான் ஒரு பெரும் கொள்கையைக் கொண்ட சித்தாந்தவாதியல்ல. அவருக்கு பெரிய கொள்கைகளை, சித்தாந்தந்தத்தை வகுத்தவர்களையும் தெரியவில்லை என்ற விமர்சனம் பொதுவானது. ஆனால், வடக்குக் கிழக்கில் இதுவரை இருந்த முதலமைச்சர்களில் தமிழ் மக்களை நோக்கி துரித அபிவிருத்தியை கொண்டு சென்றவர் அவர்தான் என்ற பெருமையை அவர் பெற்றிருக்கிறார். பெரும் அறிஞர்கள் என்று நாம் நினைத்தவர்கள் எல்லாம் எம்மை ஏமாற்ற, பிள்ளையான் தெரு அமைத்திருக்கிறார், விளக்கு போட்டிருக்கிறார், கட்டிடம் கட்டியிருக்கிறார். மாகாண சபை உள்ளூராட்சி சபை செய்யக்கூடியது அதுதான். மாகாணசபைக்கு அதிகாரம் கிடையாது என்று சொல்லி புலம்பியே காலம் கழித்தவர்களைப் போல அவர் இருக்கவில்லை.

அவர் பதவியில் இருந்த காலத்தில் அல்லது அதற்கு முன்னதாக அவரது கையில் ஆயுதம் இருந்த காலத்தில் அவரது நடவடிக்கைகள் குறித்த விமர்சனம் இன்னமும் தொடர்கிறது. ஆரம்பத்தில் அவர்களில் இருந்து மக்கள் விலகிப்போனதற்கு அதுதான் காரணம் என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். அவர்கள் தீவிரவாதப் போக்கில் செயற்பட்டதை மறுப்பதற்கில்லை. ஆனால், அவர்களில் மாற்றம் தெரிகிறது. மக்களும் நெருங்கி வருவது கடந்த உள்ளூராட்சி தேர்தலில் தெரிந்தது.

தமிழீழம் வேண்டுமா? இலங்கை தமிழ் மக்கள் பிரச்சினைக்கு தீர்வு வேண்டுமா? இவை கிடைக்கும் என்றால், அதற்கு முயற்சிக்க வேண்டும் என்றால் பிள்ளையானை தேடவேண்டாம். அதனைச் செய்து தருவோம் என்று உறுதி கூறும் பலர் இருக்கிறார்கள். அவர்களை நம்பலாமா என்பதை இன்னுமொரு நாள் ஆழமாக ஆராய்வோம். ஆனால், அபிவிருத்திதான் உங்கள் பகுதிக்கு தேவையெண்டால்; இதுவரை காலத்தில் கிழக்கு மாகாணத்தில், வடக்கு மாகாணத்தில் இதை மேம்படச் செய்ய தன்னால்தான் முடியும் என்று பிள்ளையான் நிரூபித்திருக்கிறார். அவருக்கு அடுத்த இடத்தில்கூட எந்த முதலமைச்சரும் இருந்ததில்லை. ஆகவே அபிவிருத்திதான் வேண்டுமென்றால் பிள்ளையானைத்தான் நீங்கள் யோசிக்க வேண்டியிருக்கும்.

பிள்ளையானும் தனது வழக்கில் இருந்து விடுதலையாகி வரவேண்டும். தேர்தலில் வென்று ஆட்சியை கைப்பற்ற வேண்டும். அதற்கு நீண்ட உழைப்பும் தேவை. பொறுமை தேவை. நல்ல திட்டம் தேவை. இதற்கு அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் என்று அவர் கூறுகிறார். அதுவும் வெற்றியளித்தாக வேண்டும்.

இப்படி எழுதியதற்காக நான் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பில் சேர்ந்துவிட்டேன் என்றோ, அரங்கம் அவர்களுக்கு ஆதரவு என்றோ அவசரமாக முடிவு செய்துவிட வேண்டாம். அப்படி திட்டம் போட்டு பிரச்சாரம் செய்யவும் ஆட்கள் இப்போதே தயாராகி இருப்பார்கள். அப்படித்தான் முடிவு செய்து என்னை திட்டினாலும், பரவாயில்லை. என் பணி சரியென்று நினைப்பதை எழுதுவது. அது மாத்திரந்தான். பிள்ளையான் மீண்டும் ஆட்சிக்கு வந்து தவறு செய்தாலும் நிச்சயமாக அதையும் எழுதுவேன்.

போற்றுவார் போற்றட்டும், தூற்றுவார் தூற்றட்டும். அனைத்தும் ஊடகனுக்கே!

# சொல்லத் துணிந்தேன்! 04



## தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்

கல்முனைத் தமிழருக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்தித் தராத அரசா தமிழருக்கு அதிகாரம் தரப்போகிறது என்று அம்பாறை மாவட்டத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் க. கோடீஸ்வரன் அண்மையில் வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் பேசியதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. இதைப் பார்த்தபோது, ‘கல்முனைத் தமிழருக்கு பிரதேச செயலகத்தை பெற்றுத்தர முடியாத தமிழ் தேசியக் கூட்டமைப்பா தமிழர்களுக்கு வடக்கு - கிழக்கு இணைந்த சமஸ்டியை



பெற்றுத்தரப்போகிறது என்ற கேள்வி என்னுள் எழுந்தது. இதே கோடீஸ்வரன்தான் முன்னொரு தடவை புதிய அரசியலமைப்பு தொடர்பான வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கையில் “சமஸ்டி” ஒளிந்து கொண்டிருப்பதாகக் கூறியிருந்தார்.

இவையெல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் கையாலாகத்தனத்தை மூடி மறைத்து, மீண்டும் ஒரு முறை தமிழ் மக்களை ஏமாற்றி, எதிர்வரும் தேர்தல்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் அரசியல் ஏமாற்று வித்தைகளே.

1965இல் தமிழரசுக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கூட்டரசாங்கம் அமைத்திருந்தது. தமிழரசுக் கட்சி சார்பில் செனட்டர் ஆக்கப்பட்ட அமரர் மு. திருச்செல்வம் அவர்கள்(அமரர் நீலன் திருச்செல்வத்தின் தந்தை) பிரதமர் டட்லி சேனநாயக்கா தலைமையிலான கூட்டணி அரசாங்கத்தில் ஸ்தலஸ்தாபன அமைச்சராக (உள்ளூராட்சி அமைச்சராக) இருந்தார்.

1967 இல் கல்முனையில் நிகழ்ந்த தமிழ் - முஸ்லிம் இனக்கலவரத்தை அடுத்து, காலஞ்சென்ற திரு தோ. அந்தோனிப்பிள்ளை தலைமையிலான ‘கல்முனை முன்னேற்றச் சங்கம்’ என்ற அமைப்பு அமைச்சர் மு. திருச்செல்வம் அவர்களிடம் அன்றிருந்த கல்முனைப் பட்டினசபையை, தரவைப் பிள்ளையார் கோயில்வீதியை பிரிக்கும் எல்லையாகக் கொண்டு வடக்குப் பகுதியை தமிழ் பெரும்பான்மை பட்டினசபையாகவும் தெற்குப் பகுதியை முஸ்லிம் பெரும்பான்மைப் பட்டினசபையாகவும் ஆக்கித் தரும்படி எழுத்து மூலமான கோரிக்கை விடுத்தது. அந்தோனிப்பிள்ளை அவர்கள் ஒரு தமிழரசுவாதியுமாவார்.

அப்போதிருந்த களநிலையில் ஒரு வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அமைச்சர் திருச்செல்வம் அவர்கள் இக்கோரிக்கையை மிகவும் எளிதாக நிறைவேற்றி வைத்திருந் திருக்கலாம். அப்போது அவர் அப்படிச் செய்திருந்தால் இப்போது சுமார் 50 வருடங்களுக்குப் பிறகு கல்முனை வடக்கு (தமிழ்) பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துவதிலுள்ள சிக்கல்கள் எதுவும் எழுந்திருக்கமாட்டாது. கல்முனை நகரமும் தமிழர்களிடம் இருந்து கைநழுவிப் போயும் இருக்காது.


அரசாங்கத்தின் பங்காளியாக இருந்த போதிலும்கூடத் தமிழரசுக் கட்சி இதனைச் செய்து கொடுக்காததற்கான சுயலாப அரசியல் காரணம் ஒன்றும் இருந்தது. அது என்னவென்றால், இதைத் தமிழருக்குச் செய்து கொடுத்தால் எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத்தேர்தல்களில் கல்முனைத் தொகுதியில் தமிழரசுக் கட்சியின் சார்பில் நிறுத்தப்படும் முஸ்லிம் வேட்பாளர்களின் வெற்றியை அது பாதிக்கும் என்பதாகும்.

தமிழர்களுக்கு நன்மையான காரணங்களைச் செய்து கொடுப்பதைவிட பாராளுமன்றத்தில் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதுதான் தமிழரசுக்கட்சியின் முன்னுரிமையாக இருந்தது.


அத்துடன் “தமிழ் பேசும் மக்கள்” என்னும் அடைமொழிக்குள் முஸ்லிம்களின் விருப்பத்துக்கு மாறாக வில்லங்கமாக அவர்களை இணைத்து அவர்களையும் தமிழர்களாக அடையாளப்படுத்துவது தமிழர்சுக் கட்சியின் யாழ் மேலாதிக்க மேட்டுக்குடியின் பாராளுமன்ற அரசியலுக்கு தேவையாக இருந்ததால் எப்போதுமே முஸ்லிம் அரசியல்வாதிகளின் முகம் கோணாமல் தமிழரசுக் கட்சியின் தலைமைப்பீடம் இவ்வாறு பல விடயங்களில் நடந்து கொண்டுள்ளது.

இந்த நிகழ்வுகளின் போது பாராளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் பிறந்திருக்கமாட்டார் அல்லது சிறுவனாக இருந்திருப்பார். ஆனாலும் அரசியலுக்கு வந்த பின்னர் அவர் இவற்றைத் தேடித் தெரிந்துகொள்ள வேண்டும். வெற்றுக்குடமாக இருந்து கொண்டு வெறுமனே ஓசை எழுப்புவதில் பிரயோசனம் ஒன்றும் இல்லை.

எது எப்படியிருப்பினும் அம்பாறை மாவட்டத் தமிழர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இனியும் நம்பி ஏமாறாமால் தங்களுடைய சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வினைத் தாங்களே தேடிக்கொள்ளும் வகையில் தனித்துவமான “அரசியல் வியூகம்” ஒன்றினை வகுத்துக்கொள்ள வேண்டும். இதற்கு அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கமும் கிழக்குத் தமிழர் ஒன்றியமும் வழிகாட்ட வேண்டும்.

# இமாலய சாதனை புரிந்த ''தேனகச் செம்மல்'' செ.இராஜதுரை



அத்தியாயம்-02

சென்ற இதழைப் படித்துவிட்டு பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தந்திருந்தீர்கள். நன்றி! அத்தோடு சில சந்தேகங்களையும் நிவர்த்தி செய்யுமாறு கோரியிருந்தீர்கள். அவை
01.புலியன்துறையா? புளியந்துறையா?
02.மோர்சாப்பிட்டியா? மோர்சாத்பிட்டியா?

*புளியன்துறை:*
ரேகடி புளியன்துறை என்னும் வழக்கிலிருந்துள்ளது. கண்ணகி வழக்குரை காவியத்தில் கப்பல் வைத்த கதையில் தூபியோட்டு என்ற பிரிவில் "பன்றித்தீவு சல்லித்தீவு பாலமுனை பாசிக்குடா --- என்றாக காலமும் வழங்கும் ஏறாவூர் தனைக்கடந்து --- சென்றப்போ புளியன்துறை சேரப் புறக்கிட்டோடி --- மன்றலொத்த தொடைபாரபர மட்டக்களப்பில் விட்டார்." என்றே குறிப்பிடப்படுகின்றது.

*மோர்சாத்பிட்டி:*
ரேகடியில் இறக்குமதி செய்யப்பட்ட எள்ளுத்தானியத்தை கொள்முதல் செய்து பெரியதொரு பாராங்கல் வைத்து அதில் மாட்டைப்பூட்டி எண்ணை வடித்த இடம் செக்குக்காரரிட வளவு என்றே குறிப்பிடப்பட்டது. அவ்வியாபாரத்தை செய்து வந்தது ஒரு முஸ்லீம் குடும்பமாகும். அவ்வளவில் இப்போது தவராசா கலேந்திரா என்பவர் தன்குடும்பத்தோடு வாழ்ந்து வருகிறார். அண்ணர் இராஜதுரையின் ஒதுக்கீட்டில் கட்டித்தரப்பட்ட கனிஸ்ட வித்தியாலயத்தின் அருகில் போர்த்திக்கீச பரம்பரையில் வந்த பறங்கியினத்தைச் சேர்ந்த லில்லிமம்மா வாழ்ந்த இடத்தை பறங்கி லில்லிட வளவு என்றே அழைத்தனர். ஆப்கானிஸ்தானிலிருந்து குதிரை, பட்டு, திரைச்சீலை கூத்துக்கலைஞர்களுக்கான டோப்பா, பெண்களுக்கான முடிமயிர், போன்றவைகளை ரேகடியில் இறக்குமதி செய்தவர் சாத் என்பவராகும். முஸ்லீம்களை போர்த்துக்கீசரும் பறங்கியினத்தவரும் மோர்(மூர்) என்றே அழைத்தனர். இந்த மோர் சாத் (மூர் சாத்) வாழ்ந்த பிட்டி (உயரமான இடம்) மோர்சாத்பிட்டியானது. செக்குக்காரிடவளவு பறங்கி மம்மாடவளவு மோர்சாத்பிட்டி இவைகள் சேர்ந்த இடமே அரசடிப் பிள்ளையார் கோவில் வீதியாகும்.

*சுயமரியாதை இயக்கம்*

ஆலயங்களில் உயிர்ப்பலிகள் இடம்பெறக்கூடாது. பிற்படுத்தப்பட்டோர் ஆலயங்களுக்குள் வணக்கத்துக்காக நுழைவதை தடைசெய்யக் கூடாது. மூடநம்பிக்கைகள் களையப்பட வேண்டும். என்ற பெரியார், அண்ணாதுரை போன்றோர்களின் திராவிடக்கொள்கையில் ஈர்க்கப்பட்டு மட்டக்களப்பிலும் அதன் கொள்கைகளை கடைப்பிடிக்க இராஜதுரையின் உந்துதலால் உருவாக்கப்பட் இக்குழுவினரை மக்கள் சு.ம.கட்சியென்றே அழைத்தனர்.

திரு.இராஜதுரை அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட மன்றங்கள் சங்கங்களை இதுவரை பார்த்தோம். அவைகளின் செயல்பாடுகள் பற்றி இனி தனித்தனியாக ஆராய்வோம். அதற்குமுன்

*மீன்பாடும்தேன்நாடு*
இராஜதுரை அவர்கள் தான் உரையாற்றுகின்ற மேடைகளிலெல்லாம் நீர்வளமும் நிலவளமும் நிறைந்த மீன்பாடும் தேன்நாடு என்ற சொற்பதத்தைக் கூறியே தன் பேச்சைத் தொடங்குவார். அவ்வாசகத்தை அன்றிருந்த கவிஞர்கள் எழுத்தாளர்கள் பேச்சாளர்கள் எல்லாம் கொலுவேற்றத் தொடங்கினார்கள். அத்திருவாசகமான "மீன்பாடும் தேன்நாடு" மட்டக்களப்பின் மகுடவாசகம் ஆனது.

தமிழ்ப்பண்ணை 1954.03.04ல் வின்சன்ட் உயர்தர பாடசாலையின் உபஅதிபர் திரவியம் இராமச்சந்திரன் அவர்கள், நாளை எமது பாடசாலையில் நடைபெறப் போகின்ற இலக்கிய சங்கத்தில் ஒரு சொற்பெருக்காற்ற முடியுமா? என இராஜதுரையிடம் வேண்டுகோளொன்றை வைத்தார். இராஜதுரை அவர்களும் அத்தலைவியின் வேண்டுகோளுக்கிணங்கி, மறுதினம் 05.03.1954ல் அப்பாடசாலையில் பெற்றதாயும் பிறந்த பொன்நாடும் என்ற தலையங்கத்தில் நீண்டதொரு பேச்சை தந்திருந்தார்.

பெற்றதாயும்பிறந்தபொன்னாடும் நிகழ்த்தப்பட்ட அவ்வுரை தமிழ்ப்பண்ணை நிறுவனத்தால் 1954 வைகாசி மாதம் 1000 பிரதிகள் அச்சிடப்பட்டு மக்களைச் சென்றடைந்தது. மக்களும் வாசகர்களும் கொடுத்த ஆதரவினால் 1955 தைமாதமும் மீண்டும் 1000 பிரதிகள் அச்சிடப்பட்டன. இப் பேச்சுப்பற்றி பலர் என்னிடம் மிக உயர்வாக விமர்சனம் தந்தார்கள். அப்பேச்சை தேடிப்படிக்க வேண்டும் என்ற அவாவினால் அதைத் தேடத் தொடங்கினேன். கடைசியில் அப்புத்தகம் காலியில் ஒரு வைத்தியரின் வீட்டில் இருப்பதாக அறிந்து அங்கு சென்றேன். அப்புத்தகம் போட்டோ பிரதியெடுக்க முடியாத நிலையிலிருந்தது. அவர் வீட்டிலேயே இருந்து அதனைப் பார்த்தெழுதிக் கொண்டு ஊருக்குத் திரும்பினேன். அப்புத்தகத்தை மீள்பதிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை இராஜதுரை நற்பணி மன்றத்திடம் வைத்தேன். அவர்களும் அதை 2013.06.ல் அச்சேற்றி 16.06.2013 ஞாயிறுக்கிழமை மட்/தேவநாயகம் மண்டபத்தில் பெரியதொரு விழாவாக அவ்வெளியிட்டு விழாவை நடாத்தினர். அவ்விழாவுக்கு தலைமையேற்குமாறும் என்னைக் கேட்க அன்றைய விழா என் தலைமையிலேயே நடைபெற்றது.



படம் 1 :(தேவதாசன் அடிகளார், அருள் தம்பிமுத்து, அண்ணர் இராஜதுரை, தவராஜா, ஜனா)



படம் 2 :(கட்டுரையாளரும் அண்ணர் இராஜதுரையும்)

அப்புத்தகத்துக்கு என்னால் வழங்கப்பட்ட பதிப்புரையை இச் சந்தர்ப்பத்தில் பதிவு செய்கிறேன்.

*பதிப்பாளர் உரை*
மீன்பாடும் தேன் நாட்டின் தீந்தமிழ் பேச்சாளர் எனது அன்புக்குரிய அண்ணர் செ.இராஜதுரை அவர்கள் அரை நூற்றாண்டுகளுக்கு முன்பு வின்சன்ட் மகளீர் உயர்தரப் பாடசாலையில் ஆற்றிய உரையைப்பற்றி பலர் என்னிடம் பெரிதாகத் தெரிவித்தார்கள். அந்த உரை பெற்றதாயும் பிறந்தபொன்னாடும் என்கின்ற பெயரில் பின்பு வெளிவந்ததாக அறிந்து கொண்டேன். அதை தேடிப்படிக்க வேண்டும் என்னும் ஆசைத்தீ என்னிதயத்தில் கொழுந்து விட்டெரிய அந்தப் புத்தகத்தை தேடும் படலம் தொடங்கியது. கண்டுபிடித்தேன். படித்தேன். சுவைத்தேன் அகமகிழ்ந்தேன்.

இப்பேச்சுப் புத்தகத்தைப்பற்றி அண்ணரோடு பேசும்போது பேச்சுவாக்கில் தெரிவித்து விட்டேன். அவ்வளவுதான். அண்ணர் அப்புத்தகத்தை பார்த்துவிட்டுத் தருகிறேன் தா என்று கெஞ்சாமல் கெஞ்சினார். அவரிடமும் இதன் பிரதி இலலையென்பதை அப்போதுதான் தெரிந்தது எனக்கு. இன்றைய சந்ததி அண்ணரைப்பற்றியும் இவரின் பேச்சுத்திறனையும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதால் இப்புத்தகத்தை மீள்பதிப்பு செய்து வெளியிட வேண்டும் என நான் விடாப்பிடியான அன்புக் கோரிக்கையை இராஜதுரை நற்பணி மன்றத்திடம் வைத்தேன். ஏற்றுக்கொண்டார்கள். இராஜதுரை நற்பணி மன்றத்தினர் இந்நூலை வெளியிட முன் வந்ததையிட்டு அக மகிழ்கிறேன்.

கோணேசர் கல்வெட்டு;; யாழ்ப்பாண வைபவமாலை; தட்சணகைலாயபுராணம்; மட்டக்களப்பு மான்மியம்; மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்க்கையும் போன்ற வரலாற்று நூல்களைப்போல் பாதுகாத்து படித்தறிய வேண்டிய பொக்கிசங்களில் ஒன்று இந்தப் பெற்றதாயும் பிறந்த பொன்னாடும். எந்நாளும் என் இதயத்தில் தேன்பலாச்சுளைபோல் இனிக்கும் சொல்லின் செல்வன் அண்ணர் இராஜதுரைக்கு அவரின் பேச்சையே காணிக்கையாக்குகிறேன். நன்றி

*எழுச்சிக்கவிஞர்*
இரா.தவராஜா

இவ்வாறான பதிப்புரையுடன் புத்தகம் வெளியிடப்பட்டது. இதற்குமுன் அவரிடம் கையினால் எழுதிய அப்புத்தகத்தை கையளித்திருந்தேன். அல்லவா அதற்கு எப்போதும் அவரிடம் நிலைத்திருக்கும் பண்பினால் எனக்கு ஓர் கடிதம் எழுதியிருந்தார். அதையும் அன்புடன் இந்நேரம் பதிவு செய்கிறேன்.

"எல்லையில்லா மகிழ்ச்சியடைந்தேன்"

இன்று 30.09.2010 நான் அடைந்த மகிழ்ச்சியை எழுதுவதற்கு வார்த்தைகள் இல்லை. என் அன்புத்தம்பி தவராசா அம்மகிழ்ச்சியை எனக்கு அளித்தார். என் இதய தெய்வம் ஸ்ரீ சத்திய சாயிபாபாவுக்கு இருகரம் கூப்பி நமஸ்காரம் செய்தேன். ஐம்பத்தேழு ஆண்டுகளுக்கு முன் மட்டக்களப்பு வின்சன்ட் மகளீர் கல்லூரியில் நான் ஆற்றிய உரை நூல்வடிவில் "பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்" என்ற பெயரில் வெளிவந்தது. பல பதிப்புகள் வெளிவந்து, பல்லாயிரக்கானவர்களின் பாராட்டுதலைப் பெற்றிருந்தது.

நாட்டின் பலபாகங்களிலுமிருந்து ஆயிரக்கணக்கான பாராட்டுக்கள். மீண்டும் பதிப்பிக்க பலர் போட்டி போட்டு முன் வந்தார்கள். நூல் கிடைக்கவில்லை.

என் அன்புத்தம்பி திரு.இரா.தவராஜா அந்நூலை தேடி கண்டுபிடித்தார். அச் செய்தி அறிந்து நான் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. என் அன்புத்தம்பி திரு.தவராஜா என் இனிய தம்பி. என்பாசறையில் வாழ்ந்த சொக்கத்தங்கம். அவரைப் போன்ற நன்றி மறவாத நல்லவர்கள் இருப்பதால் மட்டக்களப்பில் மழை பொழிகின்றது. மண் குளிர்கின்றது. பயிர்வளம் செழிக்கின்றது. அன்புக்கு உண்டோ அடைக்கும் தாழ் - என் உயிரனைய அன்புத்தம்பி தவராஜா நீடுவாழ்க நிறை செல்வம் பெறுக.

**கலாபூசணம் அரங்கம்**
**இரா.தவராஜா**

# “தெத்தாதே உஞ்சில் தெத்தாதே!”

புத்தாண்டு இனிதே கடந்து விட்டது. இன்னொரு ஆண்டு. இன்னொரு வயது. இந்தக் கட்டுரையாளனுக்கு வயது இப்போது முப்பதை அண்மிக்கிறது. இந்த முப்பது ஆண்டுகளிலும் சித்திரைப் புத்தாண்டு கொண்டாட்டத்தில் ஏற்பட்டு வந்த - வருகின்ற மாற்றத்தை கண்ணெதிரே, கண்டு உணர்ந்து திகைத்துப் போய் நிற்கிறான் அவன்.

போன வாரம் அவன் பிறந்தகமான தம்பிலுவில்லில் நாட்டுக்கூத்து ஒன்று இடம்பெற்றிருந்தது. சுமார் நாற்பதாண்டு இடைவெளிக்குப் பின் சித்திரைக்காக வட்டக்களரியில் இடம்பெற்ற கூத்து அது என்று எல்லோரும் பேசிக்கொண்டார்கள். அப்போதெல்லாம் சித்திரை பிறந்தாலே கூத்துத் தானாம். வைகாசியில் கண்ணகியம்மன் கோவில் கதவு திறக்கும் வரை, ஏன் திறந்த பின்னும் கூட, நாட்டுக்கூத்தும் வசந்தனும் விலாசமும் நாடகமும் மாறி மாறி இடம்பெறுமாம்.

“உப்ப நீங்க இரிக்கிர வூடு இரிக்கே. அதுக்கு முன்னுக்கு இரிந்த பாழ்வளவுக்குப் பேர் வெள்ளமணல் வளவு. சித்திராபோர்ணமில அங்க வட்டக்களறி போட்டு ஆடினா நிலவுல சும்ம அந்தமாதிரி இரிக்கும். மத்தளம் பேசின அரவாசி நாட்டுக்கூத்து அங்க தான் அரங்கேறிரிக்கி. அப்ப எங்களுக்கு பத்து பன்ரெண்டு வயது. பூலோகறம்பை பொம்பிள வேசம் போட்டுக்கொண்டு போடியார் சுறுட்டடிச்சி நடப்பாரு. ‘என்னகா றம்பை இது கோலம்’ எண்டு நாங்க பின்னுக்கு நக்கலடிச்சிக்கொண்டு ஓடுவம்” என்றார் ஒரு முதியவர். அவர்களது அந்த சித்திரையை நான் அனுபவித்ததில்லை. நான் அனுபவித்த சித்திரையையா இன்றுள்ள சிறுவர்கள் அனுபவிக்கிறார்கள்?

வருசம் பிறக்கிறதென்றால், எனக்கு முதலில் நினைவுக்கு வருவது ‘உஞ்சில்’ தான். ஊஞ்சல்! உஞ்சில் போடுவதற்கு பெரும்பாலும் ஒரு நிமித்தம் பார்ப்பது நினைவிருக்கிறது. குயில் கூவவேண்டும். குயில் கூவினால் உஞ்சில் போடவேண்டும், அல்லது போன வருடம் போட்டு இடையில் அறுந்துவிட்ட உஞ்சிலை திருத்திப் போடவேண்டும் என்று அடம் பிடிப்பேன். பெரும்பாலும் மார்ச் 27, 28இல் முதல் குயில் கூடும். வருடம் பிறப்பதைச் சொல்வது குயிலிசை தான் என்பதில் நம்பிக்கை கொண்டிருந்த பருவம் அது.

இன்று யோசித்தால் அதுவும் உண்மை என்றே தோன்றுகிறது. தமிழரின் வருடத்தை அறிவிப்பது பஞ்சாங்கமா, நாட்காட்டியா? இரண்டுமே இல்லையே, இயற்கையல்லவா? கொன்றை பூப்பதும், வேங்கை பூப்பதும், மரங்களெல்லாம் மஞ்சளில் குளித்து நிற்பதும் இளவேனிலில் பிறக்கும் புத்தாண்டை வரவேற்கத்தானே?

பெரும்பாலும் மார்ச் மாத முடிவில் அல்லது ஏப்ரல் மாத ஆரம்பத்தில் எங்கள் வீட்டில் நிற்கும் மாமரத்தில் அப்பா ஊஞ்சல் போடுவார். அது ஒருவர் ஆடும் சிறிய ஊஞ்சல் அல்ல. நீளமான கட்டில் பலகை ஒன்றின் இரு அந்தங்களிலும் தவாளிப்புகளை ஏற்படுத்தி ஊஞ்சல் பலகை தயாராகும். தடித்த நைலோன் கயிற்றை வாங்கி வந்து அதை தவாளிப்புகளில் இணைத்து மேலே மாமரக் ‘கந்தில்’ கட்டினால் ’உஞ்சில்’ தயார். எத்தனை முறுக்குகளை இருபுறமும் போடுகிறோமோ



அத்தனை உறுதியாக இருக்கும் உஞ்சில்.

உஞ்சில் ஆடுவது என்பது ஒரு கலை. குறைந்தது மூன்று பேர், கூடியது ஐந்து பேர் அதற்குத் தேவை. பலகையின் இருபுறமும் இருவர் நின்று கயிற்றைப் பிடித்துக் கொள்வோம். ஒன்று தொடக்கம் மூன்று பேர் நடுவில் உட்கார்ந்து கொள்வோம். முதலில் பலகையில் அமர்ந்திருப்பவர்கள் கால்களால்

பெரும்பாலும் அவர் பிள்ளையும் நம்மோடு உஞ்சிலில் ஆடிக்கொண்டிருக்கும் என்பதால், அவர் போடும் கூச்சலில் எப்படியும் உன்னுபவர்கள் அமர்ந்துவிடுவார்கள். சிலநேரங்களில் பக்கத்து வீட்டு அன்ரி கத்தத் தொடங்குவது தான் ஆபத்தான புள்ளி என்று அளவிடத் தொடங்கி, அதுவரை உன்னிக் கொண்டிருப்பதும் நடந்திருக்கிறது.

உன்னி முடித்ததும் ஊஞ்சல் சமநிலைக்கு வரும். அந்த இனிய மயக்கமும் கிறுகிறுப்பும் தீரும் வரை கொஞ்ச நேரம் அப்படியே அமர்ந்திருப்போம். அப்படி ஆறிய பிறகு தான் அடுத்த சுற்று ஆரம்பமாகும். இதன் போது பாடுவதற்கென்று நிறைய ஊஞ்சல் பாடல்கள் இருந்தன. எனக்கு இப்போது நினைவில் இருப்பது ஒன்று தான்.

“ஒரு கொத்துக் கச்சான் வறுத்துக் குத்தி
ஒம்பது பொண்டுகள் சேந்து குத்தி
கல்லும் மண்ணும் கலந்து குத்தி கல்லடி
மீனாச்சிக்குக் கலியாணம் காரில போவுதாம்
பலகாரம் வேப்பங்குச்சி மாப்பிள்ளையாம்
வெக்கங்கெட்ட றோசாவாம்”

திருமணமொன்றைக் கேலி செய்யும், ஏதோ இடக்கரடக்கலாக அமைந்த பாடல். இப்போதும் அதன் அர்த்தம் தெளிவாகப் புரியவில்லை. பொண்டுகள், கலியாணம் இந்த இரண்டு சொற்களும் அப்போது சிறுவர்கள் உச்சரிக்க வெட்கப்படுபவை. எனவே இந்தப்

அங்கு தொதல் கிண்டுவோம், நாளை மறுநாள் உன் வீட்டில் முறுக்கு என்று பங்கு போட்டுக்கொண்டு சிற்றுண்டிகள் செய்து பகிர்ந்து உண்ட அழகான காலம் அது.

குஞ்சாத்தை, அம்மம்மா, அப்பம்மா, சீனியம்மா, ஆசையம்மா, முன்வீட்டு சித்தி, பக்கத்து வீட்டு அத்தை, பின் வீட்டு அன்ரி என்று பலரும் கூடியிருக்கும் அந்த சிற்றுண்டி தயாரிப்பு முகாம்களில் சுவாரசியமான உரையாடல்கள் இடம்பெற்றபடி இருக்கும். பெண்கள் கூடினால் கேட்கவும் வேண்டுமா? அடுத்த வைகாசிக்கு வர இருக்கின்ற திருமணங்கள், வைகாசிச்சடங்கு எப்போது, கதிர்காம யாத்திரைக்கு ஆராரு போறாங்கள், பேய்க்கதைகள் கூடவே சிலபல ஊர் வம்புகள், என்று சுவையான பல கதைகள். முறுக்கைக் கடிக்கச் செல்வது போல ஆர்வமற்ற விழிகளைக் காட்டிக்கொண்டு அந்தக் கதைகளை கூர்ந்து கேட்டுக் கொண்டிருப்போம். பேச்சு எல்லை மீறும் தருணத்தில் எப்படியோ உணர்ந்து கொண்டு “குழந்தப்பிள்ளேலுக்கு இஞ்சென்ன வேல, ஓடுங்கோ” என்று அகப்பையால் விரட்டி விடுவார்கள். வட்டக்காவடி விளையாடும் போதோ, கிட்டிப்புள்ளு அடிக்கும் போதோ அவர்கள் முணுமுணுத்துக்கொண்ட முழுக்கதை எங்களுக்கும் தெரிந்துவிடும்.

சிறுவர்களுக்கு வருஷப்பிறப்பில் கிடைக்கும் இன்னொரு மகிழ்ச்சியே அது அவர்களின்

## கொன்றைபூப்பதும், வேங்கைபூப்பதும், மரங்களெல்லாம் மஞ்சளில் குளித்து நிற்பதும் இளவேனிலில் பிறக்கும் புத்தாண்டை வரவேற்கத்தானே?

தட்டித் தட்டி உஞ்சிலுக்கு விசை கொடுக்க வேண்டும். உஞ்சில் ஊசல் போல மெல்ல ஆட ஆரம்பித்ததும், இருபுறமும் கயிற்றைப் பிடித்தபடி நிற்பவர்கள் மெதுவாகக் குந்தி எழுந்து கால்களால் பலகைக்கு விசையைக் கொடுப்பார்கள். அதற்குப் பெயர் உன்னுதல்.

ஒருவர் மாறி ஒருவர் என்று, நிற்கும் இருவரும் மாறி மாறி உன்னி விசை கொடுக்க, உஞ்சில் வேகமாக இருபுறமும் ஆடத்தொடங்கும். ஒரு அந்தம் உஞ்சில் கட்டப்பட்டிருக்கின்ற கிளைக்குச் சமாந்தரமாக வரும் வரை அதிக பட்ச விசை கொடுத்து உஞ்சில் ஆடலாம். அதற்குப் பிறகு ‘உன்னக்’ கூடாது. நிற்பவர்கள் இருவரும் அமர்ந்துவிட வேண்டும். எல்லாரும்



கூச்சலிட்டு மகிழ உஞ்சில் மெல்ல மெல்ல சமநிலைக்கு வரும்.

ஒருவேளை தெரியாமல் தொடர்ந்து உன்னிக்கொண்டிருந்தோமென்றாலும் எப்படியும் நமக்குத் தெரிந்துவிடும். உஞ்சில் 180 பாகைக் கோணத்தில் இயங்கும் போது எப்படியும் வேலியைத் தாண்டி பக்கத்து வீட்டுக்கும் உஞ்சில் போய் வரும். சமைத்துக்கொண்டிருக்கும் பக்கத்து வீட்டு சித்தி அல்லது அத்தை எப்படியும், ‘குசினி’ யன்னலால் நம்மை பார்த்து விடுவார்.

பாடலை கூட்டாகப் பாடும் போது இடையில் யாரோ களுக்கென்று சிரிப்பார்கள். பிறகு எல்லோருமே சிரிப்போம். காரணமில்லாத சந்தோஷங்கள் எத்தனை இனிமையானவை!

ஒருவேளை அன்று உஞ்சில் ஆடுவதற்கு இன்னும் ஓரிருவர் அதிகமாக வந்து விட்டார்கள் என்றால் தயங்காமல் அவர்களையும்

வி.துலாஞ்சனன்

ஆட்டத்தில் சேர்த்துக்கொள்வோம். ‘உஞ்சிலின் கவுறு பாரங்கூடினா நீளும், அறுந்து போகாது’ என்பது எங்கள் நம்பிக்கை. ஆனால், ஆட்களின் எண்ணிக்கை கூடும் போது, கயிறு மரத்தில் நெருக்கமாக உரோஞ்சுவதால் ‘கடக்’ என்று சத்தம் கேட்கும். கூடவே நேராக எளிமை இசை இயக்கத்தை ஆற்றுவதற்குப் பதில் உஞ்சில் ஒரு கோணத்தில் அலையத் தொடங்கும். அதற்கு தெத்துதல் என்று பெயர். அதற்கும் ஒரு பாடல் பாடுவோம்.

“தெத்தாதே உஞ்சில் தெத்தாதே தெத்துப் பலகாரம் சுட்டுத்தாறேன்
நேரே போ உஞ்சில் நேரே போ நேத்தடிச்ச காத்தோரம்”

தெத்துப்பாட்டு படித்துக் கொண்டே உன்னுபவர்கள் செய்யும் முயற்சியில் எப்படியும் உஞ்சில் நேராக ஆடத்தொடங்கும். அது தெத்துப்பாட்டின் சக்தி தான் என்று வியந்தபடியே அடுத்த சுற்றை மகிழ்ச்சியாக ஆரம்பிப்போம்.

உஞ்சில் மட்டுமா? எத்தனை சந்தோஷங்கள் அப்போது? வருசத்துக்கான சிற்றுண்டிகள் செய்வதெல்லாம் பெரும்பாலும் குழுக்களாகவே இடம்பெற்று வந்தன. உறவினர்கள் மட்டுமன்றி, அடுத்த வீட்டு எல்லைமானக் காரர்களும் முறை வைத்துக்கொண்டு இணைவார்கள். இன்று இங்கு பலகாரம் சுடுவோம், நாளை

உழைப்பாளர் தினம் என்பது தான். கைவிசேடம்! ஒருவர் விடாமல் எல்லா உறவினர்களிடமும் “கைமுழுத்தம்” வாங்கி விட வேண்டும் என்பதிலும், தன் நண்பனை அல்லது அண்ணாவை தங்கையை விட, தான் அதிகம் சம்பாதிக்க வேண்டும் என்பதிலும் அவர்கள் பல்வேறு ராஜதந்திரங்களை வகுப்பார்கள். ஒருவருக்குத் தெரியாமல் மற்றவர் உறவினர் வீட்டுக்குப் போவதும், சில்லறைகளைக் கொட்டி எண்ணி “உன்ன விட எனக்கு ரெண்ட்றூவா கூடவே”, “இல்லயே, நான் உப்ப வீட்ட போய் அஞ்ச்றூவா கைமுழுத்தம் வாங்குவனே” என்று தங்கள் சேகரிப்பைப் பற்றி பெருமிதமாகப் பேசுவதும், அடுத்த வருஷம் வரை தன் கைமுழுத்தத்தில் பெருமளவை பொக்கிஷம் போல் காப்பதும், ஒருவரின் கைமுழுத்தச் சேமிப்பில் இன்னொருவர் ரகசியமாகக் கைவைப்பதும், சிறுவயது வருஷப்பிறப்புகளின் இனிமையான தடயங்கள்.

இன்று சமூக வலைத்தளங்களிலெல்லாம் நைண்டிஸ் கிட்ஸ் என்று கிண்டல் செய்து கொண்டிருக்கிறோம். வெறும் முப்பதாண்டுகளில் எத்தனை மாறக்கூடும், உண்மையில் எத்தனை இழந்திருக்கிறோம் என்பது உண்மையிலேயே திகைக்க வைக்கிறது. இன்று உஞ்சில் இல்லை. உறவினர்கள் ஒன்று கூடி சிற்றுண்டி செய்வதும் இல்லை, கைமுழுத்தம் கொஞ்சமாக எஞ்சியிருக்கிறது, சில்லறைகள் முற்றாக மறைந்துபோய், நூறு ரூபாய், இருநூறு ரூபாயென. கைகளுக்குப் பாரமில்லாத, ஆனால் மனதுக்குப் பாரமான கைமுழுத்தங்கள். மனம் எப்போதாவது இருந்து விட்டு ‘தெத்தாதே உஞ்சில் தெத்தாதே’ பாடுகின்றது. என்ன, இந்த உஞ்சிலில் முன்னே மட்டும் தான் செல்லமுடியும். திரும்பிச் செல்லவே முடியாது!

# பட்டறிவு

## மகாவம்சத்தைமீட்டவில்லெம்கைகர்

இலங்கையின் வரலாற்றில் வில்லெம் கைகர் (Wilhelm Ludwig Geiger 1856-1943) தவிர்க்கமுடியாத ஒரு பெயர். அவர் ஒரு கீழ்த்திசை நாடுகளின் மொழியறிஞர். குறிப்பாக இரானிய மற்றும் இந்திய மொழி குடும்பங்களின் பழமையான பண்பாடுகளை ஆய்வுநோக்கில் கற்றுச் சிறந்த இவர், பாளி மொழியிலும் சிறந்து விளங்கினார். அத்துடன் சிங்களம், மாலத்தீவு மொழி போன்றவற்றிலும் சிறப்பாற்றல் கொண்டவர்.

கைகர் ஆரம்பத்தில் கிரேக்கம், லத்தீன் ஆகிய மொழிகளைப் பற்றி கற்கத் தொடங்கியவர் அதனை இடையில் கைவிட்டுவிட்டு கலாசார கற்கையை முடிப்பதற்காக பிரபல மொழி அறிஞரான பேராசிரியர் பிரெடீக் வொன் ஸ்பீகலிடம் (Friedrich von Spiegel, 1820-1905) சேர்ந்தார். ஸ்பீகல் எழுதிய "கம்மல்வாக்ய" (Kammavâkya Bonn, 1841) என்கிற நூலே ஐரோப்பாவில் வெளியான முதலாவது பாளி மொழி நூல். பாளியில் மேலும் பல நூல்களை எழுதியவர் அவர். ஐரோப்பிய மொழியை விட்டு தூரகிழக்கு நாடுகளின் கலாசாரத்திலும், மொழியிலும் கைகருக்கு ஈடுபாடு ஏற்பட்டது ஸ்பீகலால் தான் என்று அவரின் சுயசரிதத்தில் குறிப்பிடுகிறார். ஸ்பீகலுக்குப் பின்னர் அப்பல்கலைக்கழகத்தில் அவரின் இடத்தை நிரப்பியவர் கைகர். அதே எர்லங்கன் (Erlangen) பல்கலைக்கழகத்தில் இரண்டு சந்தர்ப்பங்களில் அவர் உபவேந்தராகவும் கடமையாற்றினார்.

1895ம் ஆண்டு நவம்பர் 18 ஜெர்மனிலிருந்து கப்பலில் புறப்பட்ட கைகர் டிசம்பர் 6 அன்று இலங்கை வந்து சேர்ந்தார். அவரின் முதலாவது ஆராய்ச்சி ரொடி மக்களின் மொழி பற்றியதாக இருந்தது. ரொடி மக்கள் இலங்கையின் ஒடுக்கப்பட்ட சாதியினராக நாடோடிகளாக வாழ்ந்து வந்தார்கள். 1898 இல் அவரின் "இலங்கைப் பயணக் குறிப்புகள்" (Ceylon: Tagebuchblätter und Reiseerinnerungen) நூலில் இவை பற்றிய விபரங்கள் அடங்கியுள்ளன. இந்தப் பயணமே அவரை தொடர்ந்தும் இலங்கையின்பால் தொடர்ச்சியாக ஆய்வுகளை மேற்கொள்ள ஈர்த்தது.

ஆரம்பத்தில் தனது ஆய்வுகளுக்கான நூல்கள், ஆவணங்கள், ஓலைச்சுவடிகள் என்பவற்றை வஸ்கடுவே ஸ்ரீ சுபித்த தேரரரின் ஊடக பெற்றுக்கொண்டார். 01.11.1902 அன்று அவர் அத் தேரருக்கு பாளி மொழியை சிங்களத்தில் எழுதிய கடிதமொன்றில் மகாவம்சம் பற்றிய குழப்பங்கள் பலவற்றுக்கு பதில் அளிக்க உதவுமாறு கேட்டுக்கொண்டுள்ளார். அக்கடிதத்தில் தான் மகாவம்சத்தின் வெவ்வேறு வடிவங்களை சில நாடுகளில் இருந்து திரட்டிக்கொண்டுள்ளதாக தெரிவித்திருக்கிறார். குறிப்பாக கம்போடிய மகாவம்சம் இலங்கையின் மகாவம்சத்தை விட அதிகம் விரிவானது என்று குறிப்பிட்டு தனக்கு தூபவம்சத்தின் பிரதியை பெற்றுத்தருமாறு கோரியிருக்கிறார்.

மகாவம்சம் பற்றிய தனது ஆய்வுக்காக அனுராதபுரம், பொலன்னறுவ, மகியங்கனை, முல்கிரிகல, திஸ்ஸமாராமய, மிகிந்தலை, வேஹெரபெந்திகல, ரிட்டிகல, சீகிரிய, யாபஹுவ, தம்பதெனிய, அருன்கெலே, ரத்னபுர, குருநாகலை, பெழ்மடுள்ள, அம்பலன்தொட்ட, அலுத்னுவர போன்ற வரலாற்று முக்கியத்துவம்மிக்க இடங்களுக்கு சென்று அங்குள்ள தொல்பொருள்கள், ஓவியங்கள், சிற்பங்கள், கல்வெட்டுகள் என்பவற்றை ஆராய்ந்திருக்கிறார். 1926 ஆம் ஆண்டு அவர் இலங்கை வந்த போது தனது மனைவியுடன் சேர்ந்து பராக்கிரமபாகு காலத்தில் தனக்கெதிரான கிளர்ச்சியை அடக்குவதற்கு பயணம் செய்த பாதையில் பயணம் செய்ததாக தனது நாட்குறிப்பில் தெரிவித்திருக்கிறார்.

1905இல் ஜேர்மன் மொழியில் (die geschichtliche uberlieferung) "தீபவம்சம் மகாவம்சம்: இலங்கையின் வரலாற்றுப் பாரம்பரியம்" என்கிற நூலை வெளிக்கொணர்ந்தார் கைகர். அதை ஈ.எம். குமாரஸ்வாமி (Ethel M. Coomaraswamy) ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து (The Dipavamsa and Mahavamsa and their historical development in Ceylon), அது 1908ஆம் ஆண்டு கொழும்பில் வெளியானது.

சூளவம்சத்தின் முதற்பாகம் 1925 இலும் இரண்டாம் பாகம் 1927இலும் லண்டனில் ஜேர்மன் மொழியில் வெளியானது. மாபெல் ரிக்நேர்ஸ் (Mabel Rickners) அவற்றை ஆங்கிலத்துக்கு மொழிபெயர்த்தார்.


மகாவம்ச மொழிபெயர்ப்பு

இலங்கையின் வரலாற்றை ஆய்வுசெய்தபோது இலங்கையின் வரலாற்றைக் கூறக்கூடிய பிரதான நூலாக கருதப்பட்ட மகாவம்சத்தை பாளி மொழியில் இருந்து ஜேர்மன் மொழிக்கு 1908ம் ஆண்டு மொழிபெயர்த்தார். திருமதி மாபெல் ஹெய்னஸ் போத (Mabel haynes Bode) ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். பின்னர் அவரின் உதவியுடன் மீண்டும் மொழிபெயர்ப்பை சரிசெய்து அதன் பின்னர் 1912ம் ஆண்டு லண்டனில் உள்ள பாளி வெளியீட்டு சங்கத்துக்கு ஊடாக வெளிக்கொணர்ந்தார். ஒரு வகையில் இதனை "கைகர் மகாவம்சம்" என்று கூட பல நூல்களில் குறிப்பிடுவதை கவனித்திருப்போம்.

மகாவம்ச மொழிபெயர்ப்புக்கான ஆராய்ச்சியின் போது அவர் இலங்கையின் 6 மகாவம்ச பிரதிகளையும், பர்மிய மொழிமகாவம்ச பிரதிகள் இரண்டையும், கம்போடிய மொழி பிரதிகள் இரண்டையும் ஒப்பிட்டு ஆராய்ந்திருக்கிறார். இந்த ஒப்பீட்டு பணிகளுக்காக மட்டும் மூன்று வருடங்களை கைகர் செலவிட்டிருக்கிறார். இத்தனை ஆராய்ச்சிக்குப் பிறகும் அவர் தனது நூலில் மகாவம்ச மொழிபெயர்ப்பில் தான் முழுமையான திருப்தியை அடையவில்லை என்று செருக்கில்லாத புலமையாளராக ஒப்புக்கொண்டுள்ளார். அதாவது அதனை மேலும் செப்பனிடலாம் என்கிற கருத்து அவரிடம் இருக்கவே செய்துள்ளது.

கைகரின் நூல் அதன் பின் இலங்கையின் வரலாற்றை ஆராய முற்பட்டவர்களுக்கான பிரதான திறவுகோலாக ஆகியது.

1883 இல் தொன் அன்திரிஸ் த சில்வா பட்டுவந்துடாவ (DON ANDRIS DE SILVA BATUWANTUDAWA) என்பவரைக் கொண்டு ஆங்கிலேய அரசாங்கம் மொழிபெயர்த்த பிரதி வெளிவந்தது. அதன் பின் ஜோர்ஜ் டேனர் (George Turnour) என்பவர் முதலியார் எல்.சீ.விஜேசிங்கவுடன் இணைந்து 1889 இல் பாளியில் இருந்து ஆங்கிலத்துக்கு மொழிபெயர்த்து இரண்டு தொகுதிகளாக வெளியிட்டார். ஆனால் இவை



இரண்டிலும் பல மொழிபெயர்ப்புப் பிழைகள் இருந்ததை விளக்கித்தான் கைகரின் மகாவம்சம் வெளியானது. இன்றும் சகலரும் கைகரின் மொழிபெயர்ப்பைத் தான் ஏற்றுக்கொள்கிறார்கள். வெறும் மொழிபெயர்ப்பாளராக மட்டுமன்றி அவர் ஒரு வரலாற்று ஆசிரியராக அதனை விமர்சனபூர்வமாகவும் ஆய்வுபூர்வமாகவும் அணுகியதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

**என்.சரவணன்**

370 பக்கங்களைக் கொண்ட அவரது நூலில் 70 பக்கங்களில் மகாவம்சத்துக்கு "அறிமுகம்" எழுதியிருக்கிறார். அதை மட்டுமே சிறு நூலாகவும் பின்னர் வெளியிட்டிருக்கிறார்கள். அந்தளவுக்கு அந்த அறிமுகம் முக்கிய ஆய்வாக கருதப்படுகிறது. மொழிபெயர்ப்பு சிக்கல்கள் பற்றி மட்டுமல்ல மகாவம்சத்தில் காணப்படும் பல முரண்பாடுகளையும், குறைகளையும் கூட அதில் சுட்டிக்காட்டுகிறார்.

அவரது ஆய்வின் முடிவில் அவர் பௌத்த மதத்தின் மீது எப்பேர்பட்ட மதிப்பையும் பற்றையும் வைத்திருந்தார் என்பது அவரது எழுத்தில் இருந்து உணரமுடியும். சிங்களத்தை மட்டுமல்ல பௌத்தத்தின் தொன்மைகளையும் மீட்டதில் அவருக்கு பங்குண்டு என்றே கூறவேண்டும். இத்தனைக்கும் கைகரின் தகப்பனார் (Johannes Leonhard Geiger) ஜெர்மனியில் ஒரு கிறிஸ்தவ பாதிரியார்.

"உண்மையைச் சொல்லப்போனால் இலங்கை வரலாற்றின் முக்கியத்துவத்தை ஐரோப்பியர்கள் இன்னமும் சரியாக புரியவில்லை. ஆனால் மனிதகுல வரலாற்றில் அது முக்கியமானதொரு பக்கம்." என்று தனது "இலங்கைப் பயணக் குறிப்புகள்" நூலில் குறிப்பிடுகிறார்.

இலங்கைக்கு அவர் 1895 இல் முதற் தடவை வந்திறங்கியதை அவர் விளக்கும் போது



"கருநீல நிறச் சமுத்திரமும் அதற்குப் பொருந்துகிறபடி வெளிர் நிறக் கடற்கரையும் மனதைக் கொள்ளைக்கொள்பவை கரைக்கு அப்பால் கண்ணில் தெரிந்த பரந்த நிலம் தென்னையால் மூடியிருந்தது..."

கொழும்பிலிருந்து கல்கிஸ்ஸவுக்கு ரயில் பயணத்தை மேற்கொண்டபோது..

"... இதுவரை கனவுலகில் மட்டுமே என்னை ஆட்கொண்டிருந்த வர்ணநிறங்களில் இந்தப் பகுதியின் மரங்களைக் கண்டேன். சூழத் தெரிந்த அத்தனையும் கடும் பச்சை நிறத்தில் காணப்பட்டன...."

கைகரை மகாவம்சத்தை பாளி மொழியிலிருந்து வெளிக்கொணர்ந்தவர் என்று மட்டும் தான் பலர் அறிந்திருப்பார்கள். ஆனால் அது மட்டுமன்றி சூளவம்சம் (ஜெர்மன், ஆங்கிலம் இரு மொழிகளிலும்), ரசவாகினி, சங்யுக்த நிக்காய, சிங்கள அகராதி உட்பட இன்னும் பல மொழிபெயர்ப்புகளையும், நூல்களையும் கொண்டுவந்திருக்கிறார். வேடுவ மொழி, ரொடி உப மொழி, சிங்களம், பாளி மற்றும் சிங்கள கலாசாரம், இலக்கியம், அதன் இலக்கணம், வரலாறு, மொழி, கலை, பௌத்த இலக்கியங்கள், இந்தியத் தொல்பொருள், பூகோள சாஸ்திரம், அகராதியாக்கம் என பல்துறை அறிஞராக அவர் இருந்திருக்கிறார்.

சிங்கள மொழியானது திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தது என்கிற ஒரு கருத்து பரவலாக இருந்துவந்த காலத்தில் அது அப்படி இல்லை என்று தனது ஆய்வுகளின் மூலம் உறுதிபடுத்தினார் கைகர். அப்படி அதனை நிரூபிக்காது போயிருந்தால் பிற் காலத்தில் ஈழப் போராளிகளுக்கு மொழி ரீதியாக சிங்களத்தை தன்னுள் இழுத்துக்கொள்ள வாய்ப்பிருந்திருக்கும் என்று சிங்களவர்கள் பிற்காலத்தில் கூறினார்கள். சிங்கள மொழியை ஐரோப்பியர்களுக்கு அறிமுகப்படுத்திவர்களில் முக்கியமானவராக கைகர் கருதப்படுகிறார். அவரது இறுதிக் காலத்தில் அவர் சிங்கள அகராதியை ஆக்குவது, இலக்கண நூலை எழுதுவது என்பவற்றில் செலவழித்தார்.

மகாவம்சத்தை அவர் நேர்த்தியாக ஒப்பேற்றிய வெற்றியின் காரணமாக அன்றைய ஆங்கிலேய அரசு சூளவம்சத்தை மொழிபெயர்ப்பதற்கும், தொகுப்பதற்கும் கைகரை இலங்கைக்கு அழைத்தது. 1926இல் மீண்டும் இலங்கை வந்து அதனை முடித்தார்.

மகாவம்சம் ஒரு வீரகாவியம் என்றார் கைகர். அது அந்தக் கலைப் படைப்பாளரின் பிரதியாகவும் பார்க்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். அதேவேளை அவர் "அதில் என்ன சொல்லப்பட்டிருக்கின்றது என்பதைவிட என்ன சொல்லப்படாமல் மறைக்கப்பட்டிருக்கின்றது என்பதை ஆராய்வதே மிகவும் சிரமமான பணி." என்பதை சொல்லத் தவறவில்லை.

கைகரைப் பற்றி ஆய்வு செய்பவர்கள் கவனிக்க வேண்டிய இன்னுமொரு முக்கிய பகுதி அவர் இலங்கை வந்த காலச் சூழலில் இருந்த இலங்கையின் அரசியல், சமூக நிலை.

இந்தக் காலப்பகுதிதான் பௌத்த மறுமலர்ச்சிக் காலப்பகுதி. ஒல்கொட் தலைமையில் பிரம்மஞான சங்கம் இலங்கையில் பௌத்த எழுச்சியில் பாரிய பங்காற்றிய காலம்., மிகெட்டுவத்த ஸ்ரீ குணானந்த தேரர், ஹிக்கடுவே ஸ்ரீ சுமங்களT95 தேரர், அநகாரிக்க தர்மபால போன்ற தீவிர சிங்கள பௌத்தத் தலைவர்கள் இயங்கிய காலம். ஆங்கிலேயர்களுக்கு எதிராகவும், மிஷனரிகளுக்கு எதிராகவும் சுதேசிகள் எழுச்சி கொண்ட காலம். இப்பேர்பட்ட சூழலில் இலங்கையின் சிங்கள பௌத்தத்தின் தொன்மையை தூசு தட்டி வெளிப்படுத்த கைகருக்கு கிடைத்திருக்கக் கூடிய ஆதரவும், ஒத்தாசையும் கவனத்திற் கொள்ளலாம். அதுபோல இந்த சுதேசிய எழுச்சி கைகரின் கவனத்தையும் ஈர்க்கத் தவறவில்லை. அவரது "Unter Tropische Sonne" (சூரிய வெப்பத்தின் கீழ் 1930) என்கிற நூலில் இலங்கையின் அரசியல், சமூக, ஆன்மீக, சூழலியல் விடயங்களைப் பற்றி நிறைய பேசுகிறார். அப்போது அவர் 74வயதைக் கடந்திருந்தார்.

கைகரின் சகல நூல்கள் பல ஆங்கிலத்தில் மட்டுமல்ல சிங்கள மொழியிலும் இன்று கிடைக்கின்றன. ஆனால் தமிழில் மகாவம்சத்தைத் தவிர வேறெதுவும் வெளிவந்ததில்லை. கைகரின் பணிகள் பற்றிய ஆய்வுகளை இன்னும் பல்கலைக்கழகங்களில் செய்துகொண்டு தானிருக்கிறார்கள். 1943 இல் அவர் தனது 87வது வயதில் ஜெர்மனியில் இறந்தபோது மகத்தான சாதனைகளை விட்டுவிட்டுச் சென்றிருந்தார். குறிப்பாக இலங்கையின் வரலாற்றை மீள் கண்டுபிடிப்பு செய்ததில் அவரது பங்கு அளப்பரியது.

1989ம் ஆண்டுகளின் இலங்கை அரசு இவரது உருவ தபால் தலை வெளியிட்டு இவரை கௌரவப்படுத்தியது இலங்கை வரலாற்றில் இவரது வில்ஹெல்ம் கைகரின் அழியாதப் பெயராக நிலைத்து விட்ட ஒன்றாகும்.

# பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு உதவித்தொகை



மட்டக்களப்பு செங்கலடியை அண்மித்த புலையவெளி மற்றும் தம்பனம்வெளி ஆகிய கிராமங்களில் இருந்து க.பொ.த சாதாரணதர பரீட்சையில் சித்திபெற்ற 8 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு, புலையவெளி பேச்சியம்மன் ஆலயத்தில் அண்மையில் இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் மற்றும் கிராம மக்கள் கலந்துகொண்ட நிகழ்வில் அரங்கம் பத்திரிகையின் ஆசிரியர் சீவகன் பூபாலரட்ணமும் ஆலய மதகுருவும் கலந்து கொண்டார்கள்.

லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தினால் அபிவிருத்தி முயற்சிகள் மேற்கொள்ளப்படும் அந்தக் கிராமத்தில் இருந்து க.பொ.த உயர்தரம் படிக்க தேர்வான மாணவர்களுக்கு ஈழபதீஸ்வரர் ஆலயத்தினால் உதவித்தொகை வழங்கப்பட்டு அதற்கான வங்கி புத்தகங்களும் கையளிக்கப்பட்டன.

அந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் அவர்கள், 'ஒரு கிராமத்தின் உண்மையான வளர்ச்சி அந்த கிராமத்தின் கல்வி வளர்ச்சியே' என்று தனது உரையில் கூறினார்.

ஊர்மக்களும் வேறு பலரும் அந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.








# சித்திரை வருஷமா? சிங்கள தமிழ் புத்தாண்டா?


## ஒரு சமூகக் கொண்டாட்டம் அரசியல் நிகழ்வாக மாறிய கதை

எந்தச் சமயத்தையும் சாராத, நாஸ்திகராகிய நான் எந்த சமய விழாக்களையும் பின்பற்றுவதில்லை, கொண்டாடுவதில்லை. ஆனால் இந்த வருடம் மருத்துவ சிகிச்சை காரணமாக இம் மாதம் 2ம் திகதியிலிருந்து 16ம் திகதி வரை கொழும்பில் தங்கியிருக்க நிர்ப்பந்திக்கப்பட்டபோது, சிங்கள / தமிழ்ப் புத்தாண்டு தொடர்பாக அவதானித்ததையும் அது தொடர்பான சிந்தனைகளையும் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

கொழும்பில் எனது தங்குமிடம் தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர், பறங்கியர் கலந்து வாழும் கருபோபிரி, தெகிவளை. அதிகளவான சிங்களவர்களைக் கொண்டு வாழும் எத்துல் கோட்டை ஆகியனவாக இருந்தன. இவ்வகையில் அவ்விடங்களிலுள்ள பல்பொருள் அங்காடிகள் (கீல்ஸ், பூட்சிற்றி) கிரிலப்பனை, தெகிவளை, ராஜகிரிய சந்தைகள் ஆகியவற்றை உள்ளடக்கியன. இந்த வர்த்தக நிலையங்களிலும் சந்தைகளிலும் சித்திரை மாத ஆரம்பத்திலிருந்தே வியாபாரம் களைகட்டியது. புதிய



உடுப்புக்கள் மாத்திரமல்ல, தமிழர் பொங்கலுக்குத் தயாராவது போல வீடு கழுவுதல், புதிய தும்புக்கட்டு, புதிய விளக்குமாறு ஆகியவற்றால் வீட்டையும் அதன் சுற்றுப் புறத்தையும் துப்பரவாக்கி வீடு கழுவுதல் ஆகியவற்றைப் பார்த்தேன். கடனட்டைக் கொம்பனிகள் போட்டி போட்டு ஆடைகள், வீட்டு உபகரணங்கள், தளபாடங்கள்



ஆகியவற்றை மலிவு விலைக்கும் கடனுக்கும் மனமுவந்து உதவினர். இரவில் கொழும்பு பல வண்ண

மட்டக்களப்பிலும் பொங்கலுக்கு இப்படித்தான் இருந்தது.

## நீரியல் / நெற் உற்பத்தி புவியியல் தளங்களில் அறுவடை விழாக்கள்

விளக்குகளால் ஜொலித்தது.

தமிழர்கள் எதையெல்லாம் பொங்கலுக்குச் செய்வார்களோ அதையெல்லாம் எனது சிங்கள பௌத்த நண்பிகள் செய்தார்கள். எங்கும் ஒரே விழா மனோநிலை. புதிய மண்சட்டிகள், பானைகள், விறகுக் கட்டுகள், பச்சை அரிசி, பழங்கள் இத்தியாதி. வர்த்தக நிலையங்களில் வாழை மரங்கள், நாட்டுத் தோடைகள் தொங்கின. வேலை செய்யும் யுவதிகளும் இளைஞர்களும் பாரம்பரிய உடையில். தமிழ் யுவதிகள் - பாவாடை, தாவணி, சிங்கள யுவதிகள் மேற்சட்டையும் இடுப்பில் முண்டும் அணிந்து கூந்தலில் பெரிய பூவொன்றைச் சூடியிருந்தனர். இளைஞர்கள் சாரம் அணிந்திருந்தனர்.

மதுபானக்கடைகள் 12ம் திகதியிலிருந்து மூடப்பட்டன. (ஆனால் அதற்கு முன்னரே மதுபான விற்பனை நிலையங்களின் கூட்டம் அலைமோதித் தேவையான போத்தல்களை வாங்க முடிந்தது என்பது வேறு விடயம்.)

11ஆம் திகதி மாலையே வாகனங்களில் கூட்டம் அலை மோதியது. எல்லாரும் வருஷத்துக்கு ஊருக்குப் போகிறார்களாம். முரின்ட்ரைவில் போகும் போது ரயில் பயணிகள் தம்மை ரயில் பெட்டிக்குள் திணித்து வெளிப் பக்கம் பதுங்கியிருந்தார்கள். ருகுணுகுமாரியில் படிகளில் நின்ற படியும் பயணம். ருகுணுகுமாரி பாரம் தாங்காமலும் பயணிகள் விழுந்து விடக் கூடாதே என்ற நினைப்பிலும் மெதுவாக முனகி அலைந்து சென்றது.

புதுப்பானைகளும், கரும்பும் அவற்றைச் சுமந்து செல்லும் மோட்டார் சைக்கிளும் ஓட்டோக்களும் சனமும் அலைமோதியதை இவ்வருடம் கண்டேன்.

அறுவடை விழா, உழும் மாடுகளுக்கும் உயிர் தரும் சூரியனுக்கும் விழா என்பதால் நானும் அதில் சேர்ந்து கொண்டேன். பால் பொங்கல், பாற்சோறு சமைத்தல், இம் முறை அது இனிப்புச் சோறாக இருக்க வேண்டுமென பௌத்த குருமார் கூறியிருந்தனர். எனது நண்பியின் வீட்டில் பால்சோறுடன் கித்துள் கருப்பட்டி சேர்த்து உண்டோம். எனது நண்பியின் புகழ் பெற்ற ஓவியர்களில் ஒருவரான அவரது கணவரும் எங்களுடன் இணைந்து சாப்பிட்டார். சித்திரைவருட பலகாரங்களில் ஒன்றான அரியதரம் என்று மட்டக்களப்பிலும் கொண்டை கவுன் என்டு சிங்களவர் மத்தியிலும் கூறப்படும் அரிசிமா பலகாரம் பிரபலமானது. பயத்தம் பலகாரமும் தமிழர் மத்தியில் உருண்டையாகவும் சிங்களவர் மத்தியில் முக்கோண வடிவிலும் செய்யப்படும். டச்சுக்காரரிடம் இருந்து பெற்ற அரிசிப்பலகாரம் அல்லது குக்கிஸ் பிரபலமானது. கிழக்கு தமிழரிடையே அரிசிமாவில் செய்யப்படும் சோகி, முறுக்கு, துதோல் பிரபலமானவை. இதில் நெல்லரிசிமாவும், தேங்காய்பாலும், தேங்காயும் உருக்கெண்ணையும் அத்தியாவசியமானவை. கிராமங்களில் இன்னும் வசதி படைத்தோர் மத்தியில் ஆட்டிறைச்சிக்கறி, பலாக்காய்கறி முக்கியமானது ஆனால் பொங்கல் அன்று தமிழர் வீட்டில் மச்சம் எடுக்காதது போல சிங்கள



புத்தாண்டிற்கு சிங்களவர் வீட்டில் மச்சத்தை விலக்கி வைப்பர். ஊஞ்சல் கட்டி ஆடுதல், வழுக்கு மரம் ஏறுதல், பல்லாங்குழி விளையாடுதல் இருசாராருக்குமே பொதுவானது. மருத்துநீர் வைத்தல், புத்தாடை அணிதல், கைவிசேஷம் கொடுத்தல் போன்றவை இருசாராருக்கும் பொதுவானது. இவ் புதுவருஷம் சூரியனுக்கும் நிலத்துக்கும் நன்றி தெரிவிக்கும் ஒரு அறுவடை விழாவாக சீனாவில் இருந்து யப்பான் உற்பட தென்கிழக்காசிய நாடுகள் போன்ற வெவ்வேறு நாடுகளில் ஒரே காலத்தில் சமூக விழாவாக கொண்டாடப்பட்டது. தற்போதும் கொண்டாடப்படுகின்றது. தமிழர் 'விகாரி' என்றும் வடகிழக்கு அசாமியர் 'விகு' என்றும் சிங்களவர் 'பக்' என்றும் இவ்வருட சித்திரை புத்தாண்டிற்கு

**சித்ரலேகா மௌனகுரு**

பெயரமைத்துள்ளனர்.

இலங்கையில் 1977ம் ஆண்டுதான் இலங்கை ஒளிபரப்பு கூட்டுத்தாபனம் தமிழ் சிங்கள புத்தாண்டு கொண்டாட்டத்தை பொலனறுவையின் பராக்கிரம



சமூத்திர கரைகளில் இருந்து ஒளிபரப்பியது.

அரசியல் காரணங்களுக்காகவே சித்திரை வருஷ பிறப்பும் அழுத்அலூறுதவும் சிங்கள தமிழ் நியூஇயர் என கலண்டர்களில் குறிக்கப்பட்டது. நீண்ட விடுமுறைகளும் அரசினால் அளிக்கப்பட்டன. இதுவே அரசும் அரசியல் கட்சிகளும் உருவாக்கும் கதை.

# மருத்துவத் தவறுகள் 02

மருத்துவர் சிவச்சந்திரன் சிவஞானம்

வைத்தியர்கள் தவறு செய்துவிட்டார்கள், எல்லோரும் சேர்ந்து மறைத்துவிட்டார்கள் என்று அடிக்கடி செய்திகள் வந்துகொண்டிருக்கும். அப்படியான செய்திகள் வரும்போதெல்லாம் யாராவது என்னை அதில் இணைத்து அந்த மரணம் பற்றி விளக்கம் கேட்பார்கள். அதில் சுவாரசியம் என்னவென்றால் என்னோடு சம்பந்தமில்லாத மரணம் பற்றி என்னிடம் விளக்கம் கேட்கும் பலரின் வீட்டிலே ஒன்று அல்லது பல வைத்தியர்கள் இருப்பார்கள். அவர்களிடம் இலகுவாக விடயங்களைக்கேட்டு விளக்கம்பெற முயற்சிக்காமல், என்னை இணைப்பதன் மூலம் அவர்கள் பகிர்கின்ற செய்திகளுக்கு ஒரு பரபரப்பை உருவாக்குவது மட்டுமே பலரின் நோக்கமாக இருக்கின்றது.
இலங்கையில் மட்டுமல்ல உலகத்தின் எந்தவொரு நாட்டிலும் மருத்துவத்துறையில் உள்ளவர்கள் மருத்துவ விடயங்கள் பற்றி வெளியிடுவதற்குத் தடை உள்ளது.

ஒரு மனைவி மருத்துவம் பெறும்போது அவரின் கணவரிடம்கூட மனைவி பற்றிய விடயங்களை மனைவியின் அனுமதியில்லாமல் சொல்லமுடியாது.

அதேபோல் ஒரு பெண் இறந்தால் அவரின் நெருங்கிய உறவினர்களோ மட்டுமே அந்த மரணம் பற்றிய விடயங்களை உரையாட அனுமதியுள்ளது. மற்றவர்கள் அதுபற்றிய எந்த கருத்து வேண்டுமென்றாலும் உறவினர்களைத்தான் கேட்கவேண்டும்.

அண்மையில் நான் இங்கிலாந்து நாட்டின் பட்டமேற்படிப்புப் பரீட்சையொன்று எழுதினேன். அதில் கேட்கப்பட்ட ஒரு கேள்வி, 'ஒரு மணமான பெண் தன்னுடைய புதிய காதலனோடு சேர்ந்து கர்ப்பம் தரித்துவிட்டு உங்களிடம் வருகிறார். அவர் அந்த விடயத்தை தன்னுடைய கணவனிடம் சொல்லாமல் கருக்கலைப்புச் செய்யும் படி கேட்கிறார். கருக்கலைப்புச் செய்யாமல், தான் கர்ப்பமாக இருக்கும் விடயம் கணவனுக்குத் தெரியவந்தால் தன்னுடைய மணவாழ்க்கை பாதிக்கப்படும் என்று கருதுகிறாள். கணவனோ தன்னுடைய மனைவியின் நிலமையைக்கேட்டு வற்புறுத்திக்கொண்டிருக்கிறார். அப்போது என்ன செய்வீர்கள்?"

அதற்கான பதில், கணவனிடம் விடயத்தைச் சொல்லாமல் கருக்கலைப்புச் செய்துவிடுவது என்பதுதான்.

இதுதான் மருத்துவத்துறையினருக்கு இருக்கும் கட்டுப்பாடுகள்.

அண்மையில் ஒரு நண்பன் ஒரு கர்ப்பிணி இறந்த செய்தியை அந்தப் பெண்ணின் படத்தோடு இணைத்து வெளியிட்டுவிட்டு, என்னிடம் அந்தப்பெண்ணின் மரணத்திற்கான காரணம் கேட்டிருந்தார்.

அந்தப்படத்தை நானும் பகிர்ந்தால், யாராவது என்மீது கோபமாக இருக்கும் ஒருவர், விசாரணையில் இருக்கும் ஒரு மரணம் பற்றிய செய்தியையும், நோயாளியின் படத்தையும் உரியவர்களின் அனுமதியில்லாமல் பகிர்ந்துள்ளார் என்று முறைப்பாடு செய்தால், நான் மருத்துவராக வேலை செய்வதற்கான அனுமதி நீக்கப்படும் அபாயமும் உள்ளது.

அந்தச் சட்டச்சிக்கலுக்கு அப்பால் அந்த மரணம் பற்றிய காரணத்தை செய்திகளில் வரும்விடயத்தை மட்டும் வைத்து என்னால் ஊகிக்க முடியுமா? இல்லை.

போனவருடம் யாழ்ப்பாணத்தில் இறந்த கர்ப்பிணிகளின் விடயங்களை ஆராயும் கூட்டத்திற்கு அண்மையில் சென்றிருந்தேன். அதில் ஒரு கர்ப்பிணி "கர்ப்பம்" தரித்த நாள் முதல் மரணமாகும் தினம் வரை நடந்த அத்தனை விடயமும் ஆராயப்படும். போனவருடம் மரணமான பெண்களின் செய்திகள் வழமைபோல பல இணையங்களில் வந்திருந்தன. அந்தக்கூட்டம் தவறுகளை அறிந்து அடுத்தமுறை அதைத்தடுப்பதற்காக நடத்தப்படும் கூட்டம். வைத்தியர் தவறுவிட்டது தெரியவந்தாலும் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படாமல், தவறுக்கான காரணத்தை ஆராய்ந்து அதை நிவர்த்தி செய்து இன்னொரு தவறு நடக்காமல் இருப்பதற்காக செய்யப்படுவது. அதனால் அந்தக்கூட்டத்தில் பொய் சொல்லப்படாது.



மேலும் அங்கே இருப்பவர்கள் எல்லோரும் மருத்துவத்துறை சார்ந்தவர்கள், ஆகவே பொய் சொல்லி இலகுவாக ஏமாற்றவும் முடியாது. ஆனால், அந்தக்கூட்டத்தில் சொல்லப்பட்ட விடயங்கள் அத்தனையும் இணையங்களில் வந்த செய்திகளில் முற்றிலும் மாறுபட்டிருந்தன.
இப்படியான நிலமை இருக்கும்போது இணயத்தள செய்திகளை மட்டும் வைத்து எந்த ஒரு விடயத்தையும் என்னால் ஆராயமுடியாது.

அப்படியென்றால் இலங்கையில் மருத்துவத் தவறுகள் நடப்பதேயில்லையா?

இலங்கையில் மட்டுமல்ல உலகத்தின் எந்தவொரு நாட்டிலும் மருத்துவத்தவறுகள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. அமெரிக்காவில் வைத்திய சாலையில் ஏற்படும் மரணங்களுக்கான காரணங்களில் மூன்றாவது இடம் மருத்துவத்தவறுகளால் ஏற்படுவதாக அண்மையில் வாசித்தேன்.

இலங்கையிலும் அவை நடந்துகொண்டுதான் இருக்கின்றன. அவற்றைச் சட்டரீதியாக அணுகி பாதிக்கப்பட்டவர் தகுந்த நிவாரணம் பெற நம்நாட்டில் என்ன என்ன சிக்கல்கள் இருக்கின்றன?
முதலில் ஒரு மருத்துவத்தவறு நடந்துவிட்டதாக ஒரு நோயாளி நினைத்தால் இங்கிலாந்தில் என்ன நடக்குமென்று விளக்குகிறேன்.

ஒரு வைத்தியர் தவறு செய்ததாக நோயாளி நினைத்தால் முதலில் வைத்திய நிபுணர், என்ன நடந்தது என்ற விளக்கத்தை நோயாளிக்கு அளிப்பார். நோயாளி அதில் திருப்தியடையவில்லையென்றால் வைத்திய நிபுணரே அடுத்ததாக என்ன செய்யவேண்டும் என நோயாளிக்கு விளக்கமளிப்பார். அடுத்து வைத்தியசாலை மட்டத்தில் ஆரம்பகட்ட விசாரணையின் பின் நோயாளிக்குரிய விளக்கம் அளிக்கப்படும். நோயாளி அதில் திருப்தியடையவில்லை என்றால் சட்ட ரீதியாக வழக்குப் பதிவார். அப்போது வைத்தியசாலை சட்ட ஆலோசகர் வழக்கின் தன்மையை ஆராய்ந்து உண்மையில் தவறு நடக்கவில்லை என்று வாதிட்டு வெல்ல முடியாது என்றால், நோயாளியோடு தகுந்த நிவாரணத்தோடு சமரசம் செய்துகொள்ள வைத்தியசாலை முயற்சி செய்யும். அதுவும் திருப்தியில்லை என்று நீதிமன்றம் சென்று, அதன்பின் வைத்தியர் தவறு செய்ததாக தீர்ப்பு வெளியானால், நீதிமன்றம் சொல்லும் நஷ்ட ஈட்டை வைத்தியசாலை கொடுக்கும். அதேநேரம் வைத்தியர் விட்ட தவறுக்கேற்ப மீள் பயிற்சியளித்தல், வேலை நீக்கம் என தண்டனைகள் வைத்தியசாலையால் வழங்கப்படும்.
இங்கே ஒரு நோயாளிக்கான நஷ்ட ஈடு வைத்தியசாலைதான் கொடுக்கவேண்டுமென்றதால் தரக்கட்டுப்பாட்டில் வைத்தியசாலை மிகவும் அவதானமாக இருக்கும்.

இப்போது இலங்கையை யோசித்துப் பாருங்கள், நிலமை புரியும்.
ஒரு வைத்தியர் தவறு விட்டால், வழக்குப் பதிந்து எத்தனை வருடங்களுக்குப்பின் தீர்ப்பு வரும்? நானறிய 15 வருடங்களாக நடைபெறும் வழக்குகளும் உள்ளன.

அடுத்து சட்டத்துறையின் வினைத்திறன் எப்படியிருக்கிறது?
வன்முறையை கையில் எடுக்காமல் சட்டப்படி அணுகுங்கள் என்று போட்ட ஒரு முன்னைய பதிவுக்கு ஒரு சட்டம் படிக்கும் மாணவன் இலங்கையில் சட்டரீதியாக அணுகுவதால் பயனில்லை என்று சொல்லுமளவுக்கு வினைத்திறன் குறைவாக இருக்கிறது.

அடுத்து நஷ்ட ஈட்டை யார் கொடுப்பது?

ஒரு மென்பொருள் தயாரிப்பு நிறுவனத்தில் வேலை செய்கிறீர்கள், நீங்கள் தயாரித்த மென்பொருள் வேலை செய்யாமல் போக வாடிக்கையாளர் நஷ்ட ஈடு கேட்டால், உங்களை வேலைக்கமர்த்திய கம்பனி நஷ்ட ஈட்டைக் கொடுத்துவிட்டு உங்கள் மீது நடவடிக்கை எடுக்கும். இந்தச் சிக்கலினால் அந்தக்கம்பனி உண்மையில் திறமையானவர்களைத்தான் தேர்ந்தெடுக்கும்

அதேபோல்தான் வைத்தியர் தவறு விட்டால் நஷ்ட ஈட்டை வேலைக்கமர்த்தியவர் கொடுக்க வேண்டும், அதன்பின் குறிப்பிட்ட வைத்தியர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்.
மென்பொருளும் உயிரும் ஒன்றா என்ற விதண்டாவாதமெல்லம் இங்கே வேண்டாம்.

ஒரு கற்பனையான உதாரணம் சொல்கிறேன்.

ஒரு கர்ப்பிணி இரவில் அட்மிட் ஆகிறார், ஜூனியர் வைத்தியர் நோயாளியைப்பார்த்து ஒரு முடிவினை எடுக்கிறார், அது பிழையான முடிவு. அதனால் நோயாளி இறக்கிறார். ஆனால் அவர் அந்த முடிவை வேண்டுமென்று எடுக்கவில்லை, அவரது அனுபவம், திறமை என்பவற்றின் அடிப்படையிலே எடுக்கிறார். அந்த இடத்திலே அவர் நோயாளியின் நிலமையைச் சரியாகக் கணித்து என்னிடம் அறிவித்திருந்தால் நோயாளி காப்பாற்றப்பட்டிருப்பார்.
இந்த மரணத்தின் பின் என்னால் என்ன செய்ய முடியும்?

முதலில் உறவினருக்கு அந்த நோயாளி இறந்ததிற்கான மருத்துவக்காரணத்தைக்கூற வேண்டும். அடுத்து அவருக்குக்கொடுத்த மருத்துவச் சிகிச்சை பொருத்தமற்றதாகிவிட்டது அதனால்தான் அவர் இறந்துவிட்டார் என்று கூறமுடியும்.
அடுத்து வைத்தியசாலை அத்தியகட்சருக்கு அதுபற்றி அறிவித்து, அந்த ஜூனியர் டொக்டர் என்ன காரணத்தால் அந்தப்பிழை விட்டார் என ஆராய்ந்து, அவருக்கான மேலதிக பயிற்சி தேவையா? அல்லது வேறு ஏதாவது நடவடிக்கை தேவையா என்று ஆராய்வோம்.
ஆனால், இங்கே நிறையப்பேர் எதிர்பார்ப்பது உறவினர்களிடம் ஜூனியர் டொக்டர் பிழை செய்து கொலை செய்துவிட்டார் என்று சொல்லி பல மில்லியன்களை அந்த ஜூனியர் டொக்டரிடம் நஷ்ட ஈடாகப்பெற்றுக் கொடுக்கவேண்டும் என்பது.

இங்கே ஜூனியர் டொக்டர் நோயாளி பற்றி எடுத்த கணிப்புத்தான் பிழை. அந்தப்பிழையான கணிப்பினை அவர் மேற்கொள்ள அவரது வேலைப்பளு அதிகமாகி களைப்பாக இருந்தது காரணமாக இருக்கலாம். அவர் அந்த நோயாளிக்குச் செய்த பரிசோதனைகளின் சில ரிப்போர்ட் பிழையாக வந்தது காரணமாக இருக்கலாம். இப்படிப்பல காரணங்கள் இருக்கலாம். அவற்றை ஆராய்ந்து நஷ்ட ஈடு பற்றி நான் முடிவெடுக்க முடியாது. அதை நீதிமன்றுதான் முடிவெடுக்கவேண்டும்.

ஆனால், அப்படியொரு மரணம் நடந்தபின் அடுத்த நாள் இணையத்தில் செய்தி எப்படி வெளிவரும்?
வலியோடு சென்ற பெண்ணை வைத்திய நிபுணர் பார்க்காமல் கொலை செய்துவிட்டார் என என் பெயர்தான் முதலில் பதிவாகும். அப்போதுகூட நான் தப்பிக்கொள்வதற்காக ஜூனியர் டொக்டர் என்னிடம் சொல்லாமல் விட்ட தவறுக்கு நான் என்ன செய்யமுடியும் என்று கூற முடியாது.

மேலும், அப்படி பிழையான முடிவை எடுக்கும் நிலையில் ஒரு ஜூனியர் டொக்டர் இருப்பதை கணிக்காத நானும் அந்த மரணத்திற்கான பொறுப்பை கொஞ்சம் எடுத்தாக வேண்டும்.

நடைமுறையில் இவ்வாறான தவறுகளைத்தடுக்க என்ன செய்யமுடியும்.
இந்தக்கட்டுரையை எழுதிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் என் விடுதியில் கடமையில் இருக்கும் ஜூனியர் டொக்டர் வெறும் ஒருமாதம் மட்டும் அனுபவம் உள்ளவர்.
ஒரு பெரிய வைத்தியசாலையில் சாதாரணமாக ஆறு மாதம் அனுபவம் வரும்வரை தனியாக கடமை கொடுக்கப்படாது. ஆனால் 4 வைத்தியர்கள், நால்வருமே மிகவும் அனுபவம் குறைந்தவர்களாக இருக்கும் என் விடுதியில் அது சாத்தியமில்லை.
அதனால், வருகின்ற ஒவ்வொரு நோயாளி பற்றியும் எனக்கு அறிவிக்கவேண்டும் என்று சொல்லி என்னுடைய கடுமையான மேற்பார்வையின்கீழ் அவரைத் தனியாக கடமை செய்ய அனுமதிப்பதைவிட வேறு வழி என்னிடம் இல்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் வேலைப்பளு எனக்கும் அதிகம், அந்த ஜூனியருக்கும் அதிகம். இருந்தாலும் நோயாளிகளின் நன்மை கருதி அதீத பொறுப்பெடுத்து இதைச் செய்துகொண்டிருக்கிறோம். எந்தத்தவறும் நடந்து ஒரு நோயாளியும் பாதிக்கப்பட விடமாட்டோம் என்ற நம்பிக்கையில்தான் இதைச் செய்துகொண்டிருக்கிறோம். ஆனால்,உண்மையில் 100 வீதம் தவறினைத் தடுக்கவேண்டுமென்றால் நான் என்ன செய்ய வேண்டும்?

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்
மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.

## ஒற்றுமையுடன் செயற்பட்ட பன்சேனை மக்கள்

'பன்சேனை மக்களை பாராட்டத்தான் வேண்டும். பன்சேனை மக்களைப் போன்று எல்லா இடங்களிலும் உள்ள மக்களும் ஒன்றிணைந்தால் படுவான்கரைப் பிரதேசத்தில் நடக்கின்ற சட்டவிரோத செயற்பாடுகளை முற்றாகவே ஒழித்துவிடலாம்' என கனகசுந்தரும் வேலாச்சும் சில்லிக்கொடியாறு சந்தியில் நின்று பேசிக்கொண்டிருந்தனர்.

பன்சேனை மக்கள் அவ்வாறு என்னத்தைத்தான் செய்தார்கள் என்று, எல்லோரும் சிந்திக்க கூடும். அவர்கள் செய்ததை அறிய, தொடர்ந்தும் வாசியுங்கள்; பல விடயங்கள் புலப்படும். படுவான்கரைப்பிரதேசத்தில் யுத்த நிறைவுக்கு முன்னர் சட்டவிரோத



செயற்பாடுகள் நடைபெறவில்லை. யுத்தம் நிறைவுபெற்றதன் பின்புதான் பல சட்டவிரோத செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவற்றினை முற்றாக ஒழித்தாகும் செயற்பாடுகளை அரசாங்கத்தரப்பினரும் செய்து முடிக்கவில்லை என்று வேலாச்சி கூற, கனகசுந்தரும் பேச ஆரம்பித்தான். முன்னர், நம்ம என்ற எண்ணம், இப்பலெல்லாம் அவங்கள் என்ட எண்ணம் அதனாலதான் சட்டவிரோத செயற்பாடு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது என நான் நினைக்கிறேன் என்ற மெதுவான பேச்சுடன், இதைவிட விரிவுபடுத்திக்கூற நான்விரும்பவில்லை, உனக்கு புரியும்தானே என்றான் கனகசுந்தரம்.

இதெல்லாம் பேசி முடிந்த பின்புதான் பன்சேனை மக்களைப் பற்றி பேச ஆரம்பித்தான், பன்சேனை மக்கள் அன்றாடம் கூலிவேலை செய்து குடும்பத்தினை வழிநடத்துகின்றவர்கள். இங்கு அடர்ந்த காடுகளும், குளங்களும், வயல்களும் காணப்படுகின்றன. இதனால் இப்பகுதி மக்கள் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காவதுமுண்டு. இதுவெல்லாம் இவ்வாறிருக்க, இப்பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையங்களை, சமுதாய நலன்சாராத, தம் நலன்மட்டும் சார்ந்த சிலர் அமைத்திருக்கின்றனர். இந்நிலையங்கள் மூலமாக உற்பத்தி செய்யப்பட்ட சட்டவிரோத கசிப்புக்கள் படுவான்கரையில் உள்ள ஆண்களை நாடிக்கொண்டிருந்த நிலையில், பன்சேனை கிராமமக்களின் காதுகளுக்கு இச்செய்தி கிடைக்கப்பெற்றதன் நிலையிலேயே, பன்சேனை கிராமமக்கள் ஒன்றிணைந்து அந்நிலையங்களை முற்றுகையிட்டுள்ளனர்.
இந்நிலையங்கள் அனைத்தும் குளத்தினை அண்டிய காட்டுப்பகுதிகளிலேயே அமைக்கப்பட்டிந்தன. பன்சேனைக் கிராம சேவையாளர் பகுதியில் உள்ள கண்டியநாறுகுளம், அடைச்சகல்குளம், நல்லதண்ணீயோடைக்குளம் ஆகிய குளக்கரைகளை அண்டிய காட்டுப்பகுதிலேயே கசிப்பு உற்பத்தி நடைபெற்றுள்ளது. இப்பகுதிகளில் இருந்து 19பரல்கள் மக்களால் கைப்பற்றப்பட்டுள்ளன.

**படுவான் பாலகன்**

பொதுமக்களால் இவ்வாறு பெருமளவிலான கசிப்பு உற்பத்தி பரல்கள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன எனக்கூறிய கனகசுந்தரம், இம்மக்களின் செயற்பாட்டை பாராட்டாமலும் இருக்கமுடியாதென்ற கருத்தையும் முன்வைத்தார்.

அதேவேளை இம்மக்களைப் போன்று அனைத்து இடங்களிலும் உள்ள மக்களும் தங்கள், சமுகத்தின் நலன்சார்ந்து ஒன்றாக இணைய ஆரம்பித்தால் படுவான்கரைப்பிரதேசத்திலே எவ்வித சட்டவிரோத செயற்பாடுகளும் நடைபெறாது.

குறைந்த விலையில், கூடிய கசிப்புக்கள் விற்கப்படுவதாக பேசிக்கொள்கின்றனர். இதனால் கண்டவர்ளெல்லாம் குடிகின்றனர். குடியின் விளைவு குடித்தனத்தினையே சீரழிக்கின்றது. இதைவிடவும், அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற மது உற்பத்திகளை தயாரிப்பதெற்கென சூத்திரங்கள் இருக்கின்றன. அச்சூத்திரங்களுக்கேற்பவே மதுபானம் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. ஆனால் இவ்வாறு சட்டவிரோதமாக விற்பனை செய்யப்படுகின்ற கசிப்பு உற்பத்திகளுக்கு எவ்விதமான சூத்திரங்களும் இல்லை. இதனால் உடலுக்கு பாரிய பங்கம் ஏற்படும் அபாயமும் உள்ளது. இதனை அறியாதவர்களாக ஒருநாள் சுகத்திற்காக இவ்வாறான சட்டவிரோத வடிசாரயங்களை அருந்தி தமது உடல்ஆரோக்கியத்தினை கெடுத்துக்கொள்கின்ற மக்களும், தம்பின்னால் உள்ள தமது உறவுகள் பற்றியும் கரிசனை கொள்ள வேண்டும். என்ற கருத்தினை கனகசுந்தரம் முன்வைக்க. வேலாச்சியும் தன்கருத்தினை கூற ஆரம்பித்தான் பலகாலங்களாக நொந்து, நொருங்கியுள்ள படுவான்கரை மக்களை அழிக்கும் செயற்பாடுகளில் சட்டவிரோதமான கசிப்பு உற்பத்திக்கும் பெரும்பங்குண்டு. இதனால் ஏற்படக்கூடிய விளைவினை இப்போது கணக்கெடுக்க முடியாது. இன்னோர் 10வருடங்களின் பின்புதான் இதன் தீமை விளைவை பெரிதாக அறியமுடியும். தமது சுயலாபங்களுக்கும், வருமானங்களுக்காகவும் இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளை செய்கின்றவர்களும், தம்உறவுகள் சார்ந்து சிந்தித்து இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுவதனை நிறுத்த வேண்டும். உங்களால் பலர் வாழ்வதை எண்ணி சந்தோசமடையுங்கள், அதைவிடுத்து உங்களால் பலர் இறப்பதை பார்த்து மகிழ்ச்சி கொள்ளாதீர்கள் என்ற தனது ஆதங்கத்தினை சூரியன் மறையும் திசையைப் பார்த்து கூறியவனாக அவ்விடத்திலிருந்து அகன்றான்.

# தீரனியம்

## அலகு 3

**பா. யூடி ரமேஸ் ஜெயகுமார்.**
**அருட் சகோ. வி. மரியதாஸ்.**

பிள்ளைகளின் வளர்ச்சியும் விருத்தியும்

வளர்ச்சியும் விருத்தியும் பொதுவாக நிகழ்கின்ற தொடர்ச்சியான செயற்பாடுகளாகும். எனினும் இவை பிள்ளைகளுக்கு ஏற்ப வேறுபடலாம். முற்றுமுழுதாக ஒருவரில் தங்கியிருக்கின்ற நிலை முதல் பூரண சுதந்திரமாக, தனியாக, உதவியில்லாமல் செயற்படுகின்ற நிலைவரை பல்வேறு திறன் விருத்தி செயற்பாடுகள் மூலமாக பிள்ளைகள் சுயாதீனமாக இயங்கக்கூடிய நிலைக்கு வருகின்றனர். .

வாழ்க்கைச் சக்கர படிமுறைகள்

| படிநிலைகள் | வயதெல்லை |
|---|---|
| 1. தொட்டில் பருவம் (Infancy) | ஒருவயதிலும் குறைவு < 1 |
| 2. குழந்தைப் பருவம் (Toddler) | 1 – 1½ வருடங்கள் |
| 3. முன்பிள்ளைப் பருவம் (Pre-Childhood) | 2½ - 5 வருடங்கள் |
| 4. இடைநிலை பிள்ளைப் பருவம் (Middle Childhood) | 5 – 12 வருடங்கள் |
| 5. கட்டிளமைப் பருவம் (Adolescence) | 12 – 18 வருடங்கள் |
| 6. ஆரம்ப முதிர்ச்சிப் பருவம் (Early Adulthood) | 18 – 40 வருடங்கள் |
| 7. இடைநிலை முதிர்ச்சிப் பருவம் (Middle Adulthood) | 40 – 65 வருடங்கள் |
| 8. பிந்திய முதிர்ச்சிப் பருவம் (Late Adulthood) | 65 வயதிற்கு மேல் |

சாதாரண குழந்தைகளின் விருத்திப் படிநிலைகள்.

| செயற்பாடுகள் (பொதுவானவை) | காலம் |
|---|---|
| 1. முதுகு பிறட்டல் | 6 – 8 வாரங்கள் |
| 2. இருத்தல் | 6 – 9 மாதங்கள் |
| 3. தவழுதல் | 18 – 24 மாதங்கள் |
| 4. பேசுதல் | 3 – 4 வயது |

**6 – 8 வாரங்கள்**
தாயின் சத்தங்களைக் கேட்டு பிள்ளை சிரித்தல், குப்புற புறழுதல், கழுத்தை பயன்படுத்தி தலையை உயர்த்துதல்.
**3 மாதங்களில்**
தலையைத் தூக்கி வைத்திருத்தல், கண் தொடர்பு, பொருட்களை பிடித்து வைத்திருத்தல், சத்தம் கேட்கும் பக்கமாக உடலை திருப்புதல்.
**4 – 5 மாதங்களில்**
பொருளை அடைவதற்காக உடலை அதனை நோக்கி அசைத்தல்.˙.ஊர்தல்.
**6 – 9 மாதங்களில்.**
பொருட்களை ஒரு கையிலிருந்து மறு கைக்கு மாற்றுதல், வாயிலுள்ள பெருட்களை கடித்தல், சப்புதல், வாயால் "முட்டை" விடுதல், குந்தி இருக்க விட்டால் கைகளை முன்புறமாக வைத்து குனிந்த நிலையில் இருத்தல்.
**10 – 12 மாதங்களில்**
சுட்டுவிரலை காட்டுதல், பெருவிரலுடன் ஏனைய விரல்களை தனித்தனியாகவும், சேர்த்தும் பிடித்து பார்த்தல், பெற்றோருக்கு கையசைத்து "Bye – Bye" சொல்லுதல்.
**13 – 14 மாதங்களில்**
பொருட்களை எடுத்து வைத்தல், சேர்த்து வைத்து விளையாடுதல், தனியாக சொற்களை கதைத்தல். (அம்மா, அப்பா) ஒருவர் உதவியுமின்றி நடத்தல்.
**15 – 17 மாதங்களில்**
சுயமாக உணவு உட்கொள்ள முயலுதல். தானே தனியாக விளையாடுதல், பாவனை செய்து விளையாடுதல்.
**18ம் மாதம் தொடக்கம்**
மாடிப்படிகளில் ஏறுதல், கூடுதலான நேரம் சிறுவர் பூங்கா, பொது இடங்களில் தன்னையொத்த வயதானவர்களுடன் சேர்ந்து விளையாடுதல். கொப்பி, புத்தகங்களில் கீறுதல், கிறுக்குதல்.
**2 வயது தொடக்கம்**
இரண்டு, மூன்று சொற்களை சேர்த்து கதைத்தல், 50 சொற்கள் வரை சொல்லுதல், நன்றாக ஓடுதல், மாடிப்படி ஏறுதல் என்பன விருத்தி அடைந்திருக்கும்.
**3 வயது தொடக்கம்**
தானாக மலம் கழிக்க, மலம் வருகிறதை சொல்லுதல் அல்லது கழிவறையில் தானாக மற்றவர் உதவியின்றி மலம் கழித்தல். சுயமாக உடை மாற்றுதல். மூன்று சில்லு சைக்கிள், ஆதரவுடன் கூடிய இரண்டு சில்லு சைக்கிள் என்பவற்றை சுயமாக ஓடுதல்.

வியப்பிலாழ்த்தும் மட்டக்களப்பு ஆகமம் சாரா தெய்வ வழிபாட்டுமுறைகளும் சடங்குகளும்

24

--- பேராசிரியர் சி. மௌனகுரு ---

# மட்டக்களப்பு திரௌபதி அம்மன் சடங்கும் தமிழ் நாட்டுத் திரௌபதி அம்மன் சடங்கும்

முன் குறிப்பிட்ட சமயச் சடங்குகளில் பாத்திரத்தைத் துலக்கமாகக் காட்ட வேடமணிதல் பெரும்பாலும் இல்லை. இச்சடங்கிலே வேடமிடுதலைக் காணுகிறோம். அத்துடன் சமயச் சடங்குகளிற் சம்பந்தப்படாத பேரண்டச்சி, பன்றி போன்ற உயர்திணை, அஃறிணைப் பாத்திரங்கள் அதற்குத் தக வேடமணிந்து இந்நாடகம் சார்ந்த சமயச் சடங்கிற் பங்கு கொள்வதனையும், அரவானைப் போன்ற உருவம் செய்யப்பட்டு நாடகத்தில் அவ்வுருவமும் பங்கு பெறுவதனையும் காணுகிறோம். பாரதக் கதைகளின் பிற்பகுதி நாடகமாக நடிக்கப் பட்டபோதும் முழுவதும் நடக்கப்படவில்லை. கோயிற் சடங்குகளுடன் சம்பந்தப்பட்ட பகுதிகளே நடிக்கப்படுவது மனங்கொள்ளத்தக்கது.

நடைபெற வேண்டிய நிகழ்ச்சிகளைப் பூசாரிமாரும், பாடுவோரும் தம்முடைய பாடல்களாலேயே கூறிவிடுகின்றனர். இவர்கள் மட்டக்களப்பு மரபு வழி நாடகங்களிற் காணப்படும் அண்ணாவியார். பிற்பாட்டுக்காரரை நமக்கு ஞாபகப்படுத்துகிறார்கள். மட்டக்களப்பு மரபுவழி நாடகங்களிலே சில நிகழ்ச்சிகளைக் கூத்தர் அபிநயித்துக்காட்ட, நிகழ்த்த முடியாத பல நிகழ்ச்சிகளை அண்ணாவியாரும், பிற்பாட்டுக்காரரும், சபை விருத்தம், சபைத்தரு என்பன மூலம் கூறிச்செல்கின்றனர். திரௌபதி அம்மன் கோயிலிற் காணப்படும் இம்முறை கிரேக்க நாடகத்தின் கோரஸ் முறையினை ஞாபகத்திற்குக் கொண்டு வருகிறது.

கிரேக்க தெய்வமான டயோனிஸ்ஸின் கூட்டுப் பாடலில் இருந்து கிரேக்க நாடகம் தோன்றியது என்ற கூற்று இங்கு மனங்கொள்ளத் தக்கது.

இச்சடங்கிற் பாடப்படும் பாடல் மெட்டுகளிற் சில மட்டக்களப்பு வட மோடி நாடகங்களிற் பாவிக்கப்படுகின்றன. வடமோடியில் பெண்கள் புலம்பும் பாடல்களின் இசை திரௌபதி புலம்பும் இராகத்துடன் இயைபுடையது. இங்கு முந்திய சடங்குகளைப் போல நாடகமானது இரண்டறச் சடங்குகளுடன் பின்னிப் பிணைந்து இராமல் தனித்துத் தெரிவதனையும் சமயச் சடங்கினின்று நாடக அமிசம் மெல்லிதாகப் பிரிவதனையும் காணமுடிகிறது.

மட்டக்களப்பின் வடமோடி நாடகங்கள் மகாபாரதக் கதைகளையே மையமாகக் கொண்டவை. வடமோடிக் கூத்திற்கும் இச்சடங்கு முறைகளுக்குமிடையே காணப்படும் சில ஒற்றுமைகள் மட்டக்களப்பின் வடமோடிக் கூத்தில் மூலவேர்கள் இங்கிருந்துதான் ஆரம்பிக்கின்றதோ என்ற ஐயத்தைத் தோற்றுவிக்கின்றது.

தமிழ் நாட்டின் தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சேயூர் என்னு மிடத்திலுள்ள "இருங்கல்" என்னும் கிராமத்தில் இத்தகையதொரு நாடக அமிசம் நிரம்பிய சடங்கு நடைபெறுகிறது.

இதனைப் பாரதவிழா எனவும் அழைப்பர். சித்திரை மாதத்திற் தொடங்கி 21 நாட்கள் இது நடக்கும். நான்கு விதமான முறையில் இவ்விழா நடைபெறும்.

1) சாத்திரவிதிப்படி நடைபெறும்



கோயிற் கிரியைகள்.

2) காவியத்திற் கூறப்படும் முக்கிய நிகழ்ச்சிகளைப் பெரிய அளவில் மீண்டும் செய்து காட்டல்.

3) காவியம் படித்தல்.

4) துரியோதனன் வீழ்ச்சியினையும், திரௌபதியின் சபத வெற்றியையும், தெருக்கூத்தின் மூலம் நிகழ்த்திக் காட்டல்.

மகாபாரத காவியம் படிக்கும்போது தெருக்கூத்துக் கலைஞர் களுடன் ஊர்மக்களும் சேர்ந்து 5 நிகழ்ச்சிகளை நடத்துவர். அவை

1) அரக்குமாளிகை அழிவு.

2) பகாசுரனை வீமன் வதைத்தமை.


3) மாடுபிடி சண்டை

4) துரியோதனன் வீமன் சண்டை.

5) வில் வளைத்தல்.

இருங்கலில் மாத்திரமன்று தமிழ்நாட்டின் சில கிராமங்களிலும் இப்பாரத விழா நடைபெறுகிறது. இது பத்து நாட்கள் கூத்தாக நடப்பது வழக்கம். இவ்விழாவும் கூத்துகளும் ஊருக்கு ஊர் மாறு படும். தமிழ் நாட்டின் எருக்கம்பூரில் பார்த்த பாரதக்கதை பத்து நாட் கூத்தினை செ. ரவீந்திரன் தனது தெருக்கூத்துக் கட்டுரையில் விபரித்துள்ளார்.

அங்கு பாரதக் கதை பாகவதர் மூலம் சொல்லப்படும். அதேவேளை சில விடயங்கள் தெருக்கூத்தாக நடிக்கப்படுகின்றன. சில காட்சிகளில் மக்களும் பங்கு கொள்கின்றனர். (உ-ம்.) பகாசுரன் கதை. இது அரங்கத்தில் நடைபெறுவதில்லை. பீமனாக வேசம் கட்டியவர் ஒரு வண்டியில் ஏறிக் கொண்டு ஊர் முழுதும் சுற்றிவர ஊரில் உள்ளோர் தாங்கள் செய்த பலகாரங்களைக் கொண்டு வந்து பீமனிடம் கொடுக்க அவற்றை வாங்கி தான் ஓட்டிவந்த வண்டியை நிரப்பிய பின்னர் பீமன் கூத்துக்களத்தை




அடைந்து அங்குள்ளோருக்குக் கொடுப்பது வழக்கம். இங்கு மக்கள் அந்நாடகத்தில் பங்கு கொள்வோராகின்றார்கள். பீமன் காலச் சூழலுக்குச் செல்கிறார்கள். பகாசுர வதத்தில் தாங்களும் பங்கு கொள்கிறார்கள். இது றிச்சட் ஷெக்னரின் Environmental Theatreஐ ஒத்தாக உள்ளது என்பர் செ. ரவிந்திரன்

இந்த Evironmental Theatre ன் தன்மைகளையே பாண்டிருப்பு திரௌபதி அம்மன் கோயிற் சடங்கிற் காணுகிறோம். ஆனால் பாண்டிருப்பு திரௌபதி அம்மன் சடங்கிற்கும், தமிழ் நாட்டின் சேயூரிலும், எருக்கம்பூரிலும் நடைபெறும் பாரதக் கதைச் சடங்கிற்கும் சில வேறு பாடுகளுண்டு. தமிழ் நாட்டில் இதனைப் பாரதவிழா என்கின்றனர். மட்டக்களப்பில் இது பாரதம் படித்தல் என அழைக்கப்படுகிறது. சாத்திர விதிப்படி நடைபெறும் கோயிற் கிரியைகளும், காவியம் படித்தலும் இரண்டு இடங்களிலும் நடைபெறுகின்றதாயினும் நிகழ்த்திக் காட்டப்படும் நிகழ்ச்சிகள் வேறுபடுகின்றன. இரண்டு நாட்டுச் சடங்குகளுமே நாடக அமிசம் நிரம்பியவன வாயினும், தமிழ் நாட்டுச் சடங்கில் நாடக அமிசங்கள் கூட இருப்பதனைச் பார்க்கிறோம். சேயூரில் 5 நிகழ்ச்சிகள் நடிக்கப்படுகின்றன. எருக்கம்பூரில் பகாசுரவதம், சுபத்திரை கல்யாணம், திரௌபதி வஸ்திராபரணம், களபலி, பிரகலாதன், கீசகவதம், அருச்சுனன் தபசு, கிருஷ்ணன் தூது, அபிமன்யு வதை, கர்ண மோட்சம், பதினெட்டாம் போர் ஆகிய 11 நிகழ்ச்சிகள் நடித்துக் காட்டப்படுகின்றன. இவற்றிற் சிலவற்றில் மக்களும் பங்காளர்களாக மாறிப் பங்கு கொள்கின்றனர். சில நிகழ்ச்சிகள் தனிக் கூத்துக்களாக நடைபெறுகின்றன. ஆனால் பாண்டிருப்பு திரௌபதி அம்மன் கோயிலில் வனவாசம், அருச்சுனன் தபசு, அரவான் களப்பலி என்பனவே பிரதானமாக நடிக்கப்படுகின்றன.

தமிழ் நாட்டில் கூத்தர்களுடன் ஊர் மக்களும் சேர்ந்து அபிநயிப்பது போல இங்கு நடைபெறுவது குறைவு. வனவாசத்தின் போது மட்டுமே காய், கனிகள் பறிக்க வீமனுக்கு மக்கள் உதவுகிறார்கள். மற்ற வேளைகளில் உருவேறி ஆடுபவர்களே பாரத பாத்திரங்களாக வருகிறார்கள். சன்னதம் பிடித்து ஆடுபவர்களுடன் சம்பந்தப்படாதவர்களே பேரண்டச்சி போன்ற வேடமணிந்து வருகிறார்கள். தமிழ் நாட்டில் மேடை அமைத்தும், நிகழ்ச்சிகளைக் கூத்தாக நடத்த, பாண்டிருப்பிலோ கோயில் வெளியே கூத்தம்பலமாக ஆகிவிடுகிறது.

தமிழ் நாட்டில் நடக்கும் பாரத விழா சடங்கு நிலையினின்று சற்று வளர்ச்சியடைந்தது போலத் தோன்றுகிறது. அதனைச் சடங்கு அமிசம் நிரம்பிய நாடகம் எனவும் அழைக்கலாம். பாண்டிருப்பு பாரதம் படித்தலும், தீப்பள்ளயச் சடங்கும் முற்றாகச் சடங்கினின்று விடுதலை பெறாத விழாவாகக் காணப்படுகிறது. சடங்கு அமிசமே இங்கு கூடுதலாகவுள்ளது. இதனை நாடக அமிசம் நிரம்பிய சடங்கு எனலாம். தமிழ் நாட்டுப் பாரத விழாவைவிட பாண்டிருப்பு பாரதம் படித்தல் சடங்கு அமிசங்களைக் கூடுதலாகக் கொண்டிருந்த மையினால், இதுவே முன்னால் இருந்த முறையாக இருக்கலாம். பிற்காலத்தில் இச்சடங்கு மக்களையும் பங்காளராக்கும் சடங்காக வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இப்பாரத விழாவே தெருக் கூத்தாக வளர்ந்திருக்கலாமோ என செ. ரவீந்திரன் ஐயமுறுகிறார்.

(தொடரும்)

## தலைப்புகள் தந்த கவிதை நீ

**வில்லூர் பாரதி**



விலையிலாக் காதலை விழிகளால் விதைத்து
---வினைகளைச் செய்துமுன் வியப்புறு வனப்பு
கலைக்கோயிற் சிலையாய் கனவுகள் விதைத்து
---கவிதைகள் தந்தாய் காதலைப் புதைத்து
தகித்திடும் கோடையிற் தளிரெனத் தழைத்து
---தவத்தினைக் கலைத்தே தந்தாய்நீ தலைப்பு
அகத்தினில் அன்பினை ஆழமாய் விதைத்து
---அழகாகும் தமிழென அணைவாயெனைக் கோத்து

மழலையின் சொல்லது மலர்ந்திடும் இதழ்களில்
---மடையெனப் பாயுமென் மன்மதக் கணைகள்
விலகிட வழிகள்தேடி விடுதலையாகுமோ காற்று
---விழிகளை மூடியுன்றன் வினைகளை ஆற்று

இடைதனிற் படர்ந்துன்றன் இளங்கனி யுண்பேன்
----இடைவேளை இல்லாது இணைந்தொரு நாளன்பால்
கடைவிழி காட்டிடுவாய் காதலைச் சொல்லிடுவாய்
----காலமும்நான் காத்திருக்கும் கவிதை நீயே

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 31

## க.பொ.த. (உ/த) – புதிய பாடத்திட்டம் – தமிழ்

- மட்டுநகர் யுவன் -

### இலக்கணம்

1. எழுத்து என்றால் என்ன?
2. எழுத்து எத்தனை வகைப்படும்?
3. எழுத்தின் வகைகளைப் பெயரிடுக.
4. முதலெழுத்து எத்தனை?
5. முதலெழுத்தின் வகைகளைப் பெயரிடுக.
6. உயிரெழுத்து எத்தனை?
7. உயிரெழுத்தின் வகைகளைப் பெயரிடுக.
8. உயிர்க்குறில் எத்தனை?
9. உயிர்நெடில் எத்தனை?
10. மெய்யெழுத்துக்கள் எத்தனை?
11. மெய்யெழுத்தின் வகைகளைப் பெயரிடுக.
12. வல்லின மெய் எத்தனை?
13. வல்லின மெய்களைத் தருக.
14. மெல்லின மெய் எத்தனை?
15. மெல்லின மெய்களைத் தருக.
16. இடையின மெய் எத்தனை?
17. இடையின மெய்களைத் தருக.
18. தமிழ் நெடுங்கணக்கு ஒழுங்கில் மெய்யெழுத்துக்களை எழுதுக.
19. சார்பெழுத்து எத்தனை?
20. சார்பெழுத்தின் வகைகளைப் பெயரிடுக.
21. அச்சார்பெழுத்துக்கள் ஒவ்வொன்றினதும் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.
22. சுட்டெழுத்து என்றால் என்ன.'.
23. சுட்டெழுத்துக்களைக் குறிப்பிடுக.
24. சுட்டெழுத்தின் வகைகளைப் பெயரிடுக.
25. வினா எழுத்துக்கள் எத்தனை?
26. சொல்லுக்கு முதலில் வரும் எழுத்துக்கள் எத்தனை?
27. சொல்லுக்கு முதலில் வரும் எழுத்துக்கள் எவை?
28. சொல்லுக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள் எத்தனை?
29. சொல்லுக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள் எவை?
30. சொல்லுக்கு முதலில் இறுதியிலும் வரும் எழுத்தைக் குறிப்பிடுக.
31. இன எழுத்து இல்லாத மெய்யெழுத்துத் தொகுதி எது?
32. கூட்டெழுத்துக்கள் எத்தனை?
33. கூட்டெழுத்துக்கள் எவை?
34. கூட்டெழுத்து வேறு எப்பெயரால் அழைக்கப்படுகிறது?
35. கூட்டெழுத்துக்களின் இன எழுத்துக்களை முறையே குறிப்பிடுக.
36. குற்றியலுகரம் என்றால் என்ன?
37. குற்றியலுகரம் எத்தனை தொடர்களைக் கொண்டது?
38. குற்றியலுகரத்தின் தொடர்களைக் குறிப்பிடுக.
39. குற்றியலுகரத் தொடர்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.
40. குற்றியலுகரத்தின் மாத்திரையைக் குறிப்பிடுக.
41. 'விறகு' என்பதில் வந்துள்ள குற்றியலுகரத்தின் மாத்திரையைக் குறிப்பிடுக.
42. 'தெளிவு' என்பதில் வந்துள்ள முற்றியலுகரத்தின் மாத்திரையைக் குறிப்பிடுக.
43. 'அப்பா' என்பதில் வந்துள்ள உயிர்மெய் எழுத்தின் மாத்திரையைக் குறிப்பிடுக.
44. 'அ/.'.து' என்பதில் வந்துள்ள ஒற்றளபெடையின் மாத்திரையைக் குறிப்பிடுக.
45. 'தொழுதெழுவாஅள்' என்பதில் வந்துள்ள உயிரளபெடையின் மாத்திரையைக் குறிப்பிடுக.

**விடைகளுடன் காத்திருங்கள் அடுத்தவாரம் சந்திப்போம்**

# கற்போம்


## உயிர் அங்கிகளின் மூலக உள்ளடக்கம்

குணம் சவரிராஜா

02 தொடர்ச்சி...

57.நியூக்கிளியோடைட்டுக்களின் கட்டமைப்பு அம்சங்களைக் குறிப்பிடுக.

- நியூக்கிளியோடைட்டுக்கள் மூன்று கூறுகளை உடையன.
- அவையாவன, பெந்தோஸ் வெல்லம், நைதரசன் மூலம் மற்றும் ஒரு பொஸ்பேற் கூட்டம் ஆகும்.




நியூக்கிளியோடைட்டுக்களின் கட்டமைப்பு
(இரசாயனக் கட்டமைப்புக்களை மனனம் செய்யத்தேவையில்லை)

• ஒரு பொஸ்பேற் கூட்டம் அற்ற ஒரு நியூக்கிளியோடைட்டு, ஒரு நியூக்கிளியோசைட்டு என அழைக்கப்படும் உ- ம். அடினோசின், குவானோசின்.

**பெந்தோஸ் வெல்லம்**

- பெந்தோஸ் வெல்லங்கள் இருவகைப்படும்.
- அவையாவன டீஒட்சிறைபோஸ் மற்றும் றைபோஸ் என்பன.
- டீஒட்சிறைபோசில், றைபோசில் உள்ளதிலும் பார்க்க ஒரு ஒட்சிசன் அணு குறைவாக உள்ளது

**நைதரசனுக்குரிய மூலங்கள்**

•நைதரசனுக்குரிய மூலங்களில் இரு பிரதான வகைகள் உண்டு.
1)பியூரின்கள் - பருமனில் பெரியவை. இருவளையங்களோடு கூடியவை.
2)பிரிமிடின்கள் - பருமனில் சிறியவை. தனியொரு வளையத்தோடு கூடியது.

- பியூரின்களில் இருவகைகள் உண்டு, அவையாவன, அடினின், மற்றும் குவானின் என்பன.
- பிரிமிடின்களில் மூன்று வகைகள் உண்டு: அவையாவன, தைமின், யூராசில் மற்றும் சைற்றோசீன் என்பன.
- மூலங்கள் பொதுவாக முறையே யுஇபுஇவுஇரு மற்றும் C ஆகிய எழுத்துக்களால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றன.

**பொஸ்பேற் கூட்டம்**

•இது நியூக்கிளிக் அமிலங்களுக்கு அமிலத்தன்மையைக் கொடுக்கின்றது.

50.நியூக்கிளியோடைட்டுக்களில் இருந்து நியூக்கிளிக் அமிலங்கள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன?

- ஒரு நியூக்கிளியோரைட்டினது பொஸ்பேற்றுக் கூட்டத்தின் - ழுர் கூட்டத்துக்கும், அடுத்துள்ள நியூக்கிளியோரைட்டினது பெந்தோஸ் வெல்லத்தினது 3வது காபனின் - OH கூட்டத்துக்கும் இடையே நடைபெறும் ஒடுக்கற் தாக்கத்தினால் மில்லியன் கணக்காண நியூக்கிளியோரைட்டுக்கள் பொஸ்போ – டீஎஸ்டா பிணைப்பினால் இணைந்து பல்நியூக்கிளியோரைட் சங்கிலிகளைத் தோற்றுவிக்கின்றன.
- இப்பிணைப்புக்களின் பெறுபேறாக திரும்பத் திரும்ப அமைந்த வெல்ல – பொஸ்பேற் அலகுகளின் வடிவமைப்போடு கூடிய ஒரு முதுகெலும்பு தோற்றுவிக்கப்படுகின்றது.
- நியூக்கிளிக் அமிலங்கள் நியூக்கிளியோரைட்டுக்களின் நேரிய பல்பகுதியங்களாகும். சம்பந்தப்பட்ட வெல்ல மூலக்கூறுகளினது வகையைப் பொறுத்து இரு வகையான நியூக்கிளிக்கமிலங்கள் உள்ளன.
- நியூக்கிளியோரைட்டில் உள்ள வெல்ல மூலக்கூறு டீஒட்சிறைபோசாக இருப்பின் அந்த நியூக்கிளிக் அமிலம் னுயேு ஆகும். ஐந்து காபன் வெல்லம் இறைபோசாக இருப்பின் அந்த நியூக்கிளிக் அமிலம் சுயேு ஆகும். னுயேு அடினின், தைமீன், குவானின் மற்றும் சைற்றோசீனைக் கொண்டிருக்கும் சுயேு, அடினின், குவானின், சைற்றோசீன் மற்றும் யூராசிலைக் கொண்டிருக்கும்.

பக்க அனுசரணை
NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

# விளையாட்டு

## மட்டக்களப்பு மாவட்டத்தினை சேர்ந்த 25 பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள்



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் "நாட்டிற்காக ஒன்றினைவோம்" என்ற தேசிய திட்டத்திற்கு அமைவாக ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களை பாடசாலைகளுக்கு கையளிக்கும் நிகழ்வொன்று புதன்கிழமை(10)மாலை 5.00 மணியளவில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் எம்.ஈஸ்பரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நவரூபரஞ்சினி(காணி),மாகாண மட்ட விளையாட்டு உயர் அதிகாரிகள்,மற்றும் பிரதேச விளையாட்டு உத்தியோகஸ்தர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



பாடசாலை மாணவர்களை விளையாட்டில் ஊக்குவித்து பாடசாலைக்கும்,சமூகத்திற்கும் சிறப்பான விளையாட்டு வீரர்களை உருவாக்க வேண்டும்.பாடசாலை மாணவர்களுக்கு விளையாட்டுக்களில் ஈடுபடும் ஆர்வம் இருந்தும் அவர்கள் விளையாடுவதற்கு விளையாட்டு உபகரணம் இல்லாமல் கஸ்டப்பட்டார்கள்.

இவ்வாறான விளையாட்டு உபகரணம் இல்லாத பாடசாலைகளை "நாட்டுக்காக ஒன்றிணைவோம்" வேலைத்திட்டத்தில் தெரிவு செய்து உபகரணம் வழங்கி வைக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 5 கல்வி வலயங்களைச் 25பாடசாலைகளுக்கு இவ்வுபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## நாளை காரைதீவில் மாபெரும் கலாசார விளையாட்டுவிழா! நடுக்கடலில் படகோட்டம்!




(காரைதீவு நிருபர் சகா)

கிழக்கில் புகழ்பூத்த காரைதீவு விளையாட்டுக்கழகத்தின் 36ஆவது வருடநிறைவையொட்டியும் சித்திரைப்புத்தாண்டை முன்னிட்டும் நாளை(20) சனிக்கிழமை காரைதீவில் மாபெரும் கலாசார விளையாட்டுவிழா நடைபெறவிருக்கிறது.

கழகத்தின் 23ஆவது வருடாந்த விளையாட்டுவிழா கழகத்தலைவர் எல்.சுரேஸ் தலைமையில் காரைதீவு விபுலாநந்தா மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.



பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் கலந்துசிறப்பிக்கவிருக்கிறார். முதன்மை அதிதிகளாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், காரைதீவு பிரதேசசபைத் தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில், சொர்ணம் நகைமாளிகை முகாமைத்துவப்பணிப்பாளர் எம். விஸ்வநாதன், சக்தி எவ்எம். பிரதமபணிப்பாளர் ஆர்.பி.அபர்ணாசுதன் ஆகியோர் கலந்து சிறப்பிப்பார்கள்.

மேலும் பல நட்சத்திரஅதிதிகள் விசேடஅதிதிகள், கௌரவஅதிதிகள் சிறப்புஅதிதிகள் எனப்பலரும் கலந்துசிறப்பிக்கவிருக்கின்றனர்.
காலையில் மரதன் ஓட்டம் ,பைசிக்கிள் ஓட்டம், நடுக்கடலில் படகோட்டம், சதுப்புநில ஓட்டம் என்பன இடம்பெறும்.

பிற்பகலில் விபுலாநந்தா மைதானத்தில் பாரம்பரிய மரபுரீதியான விளையாட்டு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளதுடன் கல்விச்சாதனையாளர்களும் பாராட்டிக் கௌரவிக்கப்படவிருக்கின்றனர் என்று கழகச்செயலாளர் ரி. கோகுலவாசன் தெரிவித்தார்.

## கல்முனையில் 24 அணிகள் பங்கேற்கும் கிரிக்கட் சுற்றுப்போட்டி ஆரம்பம்!



(காரைதீவு நிருபர்)



சித்திரைப்புத்தாண்டை முன்னிட்டும் கல்முனை சைனிங் விளையாட்டுக் கழகத்தின் 37ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் அணிக்கு 11 பேர் கொண்ட மென்பந்துக்கிரிக்கட் சுற்றுப்போட்டியொன்று நேற்று ஆரம்பமானது.



கழகத்தலைவர் கே.குமார் தலைமையில் அங்குரார்ப்பணவிழா நடைபெற்றது. அவ்விழாவிற்கு பிரதம அதிதியாக உதவிக்கல்விப்பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா மற்றும் கல்முனை சுபத்ராராமய விகாராதிபதி வண.ரண்முத்துகல சங்கரத்ன தேரர்,



கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

24 அணிகள் பங்கேற்கும் இச்சுற்றுப்போட்டி தொடர்ந்து ஒருமாதகாலம் நடைபெறவுள்ளது.
முதற்போட்டியில் கல்முனை டொல்பின் அணியும் பாண்டிருப்பு யங்ஹீரோஸ் அணியும் கலந்துகொண்டன.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்

Koddamunai Sports Club
Batticaloa

தொடர்ச்சி...

## மருத்துவத் தவறுகள்

இவ்வாறு அதிக பொறுப்பெடுத்து நானும் அந்த ஜூனியர் டொக்டரும் வேலை செய்யாமல் தப்பித்துக்கொள்ள இலகுவான சட்டரீதியான வழியும் எங்களிடம் இருக்கிறது.

தனி ஒரு நிபுணர் இருக்கும் வைத்தியசாலையில் ஒன்றுவிட்டு ஒருநாள்தான் முழுநேர டியூட்டி செய்யவேண்டிய கட்டாயம் உள்ளது. அந்த கட்டாயத்தின் படி நான் ஒன்றுவிட்டு ஒருநாள் டியூட்டி செய்தால் பிரச்சினை மிக இலகுவாகிவிடும்.
நான் முழுநேரக்கடமையில் இருக்கும் நாட்களில் மட்டும் பிரசவங்களைப்பார்த்துவிட்டு, அடுத்த நாள் 4 மணியோடு அத்தனை கர்ப்பிணிகளையும் வைத்திய நிபுணர் கடமையில் இல்லை என்று யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவிடுவது நாங்கள் சட்ட ரீதியாக செய்யக்கூடியது. அவ்வாறு செய்துவிட்டால் நூற்றுக்கு கிட்டத்தட்ட 75 வீதத்துக்கும் அதிகமான கர்ப்பிணிகள் யாழ்ப்பாணத்திற்குத்தான் செல்ல வேண்டும்.
அதேபோல், நான் கடமையில் இருக்கும் நாட்களில்கூட இங்கே இருக்கும் வசதிகள் போதாது என்று கணிசமாக நோயாளிகளை யாழ்ப்பாணத்திற்குச் சட்ட ரீதியாக அனுப்பிவிட முடியும்.

இங்கே ஒரு கருதுகோளாக என்னை உதாரணமாகக்காட்டி எழுதினாலும், ஒவ்வொரு வைத்தியசாலையிலும் ஒவ்வொரு வைத்தியர்களும் இப்படியான சிக்கல்களோடுதான் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள்.

இப்படியான நடைமுறைச் சிக்கல்களோடு வேலை செய்துகொண்டுகொண்டிருக்கும் எங்களிடம் வந்து, இந்த நடைமுறைச்சிக்கல்கள் எதுவுமில்லாமல் இயங்கிக்கொண்டிருக்கும் இங்கிலாந்து போல சேவையை எதிர்ப்பார்ப்பது எந்தவகையில் நியாயம்? இப்படி நடைமுறைச் சிக்கல்களே இல்லாத இங்கிலாந்திலே மருத்துவத்தவறுகள் நடைபெறும்போது, இங்கே ஒரு தவறுகூட நடைபெறக்கூடாது என்று எதிர்ப்பார்ப்பதும் எந்தவகையில் நியாயம்? 100 வீதம் தவறு நடக்காமல் மருத்துவம் பார்க்கவேண்டும் இல்லாவிட்டால், நஷ்ட ஈட்டை வைத்தியர்தான் தரவேண்டும் என்ற எச்சரிக்கையோடு நோயாளிகள் வரத்தொடங்கினால் அநேகமான வைத்தியர்கள் மேலே சொன்னபடி தங்களைப் பாதுக்காத்துக்கொள்வதை மட்டும் அடிப்படையாக வைத்து இலகுவாக நோயாளிகளைப்பொறுப்பெடுக்காமல் தட்டிக்கழித்துவிடும் அபாயமும் உள்ளது.

ஆகவே மருத்துவத்தவறுகள் பற்றி நீங்கள் உண்மையில் அக்கறையுடையவராக இருந்தால் மேலே சொன்ன அத்தனை குறைபாடுகளும் நிவர்த்தி செய்யப்பட்டு, அபிவிருத்தியடைந்த நாட்டில் உள்ளதுபோல ஒரு கட்டமைப்பை உருவாக்க உரியவர்களுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். மாறாக வெறும் லைக்குக்காக சமூகவளைத் தளங்களில் வைத்தியர்களைக் குறிவைப்பதால் ஒரு எள்ளளவும் நன்மை வராது.

அண்மைகாலமாக ஊடகங்களில் வெளிவருவதுபோல வடகிழக்கு வைத்தியசாலைகள் இலங்கையின் மற்றைய வைத்தியசாலைகளைவிட மோசமாகி கொலைக்களமாகிவிட்டதா?

பதில் அடுத்த கட்டுரையில்.

தொடர்ச்சி...

## பயணம் தொடர, பாதையில்...

நிதானமாகச் செல்ல வேண்டும். கூடப் பயணிப்பவர்களும் ஓட்டுநரின் பொறுப்பை வலியுறுத்த வேண்டும்.

வேகம் குறைக்கப்பட வேண்டும். அதி சக்தி மிக்க வாகனங்கள் சேவையில் இருப்பதால், வேகத்தை குறைப்பதை ஓட்டுநர்கள் விரும்புவதில்லை. ஆனால், அதன் விளைவாக தனது வாகனத்தில் பயணிப்பவர்களின் உயிர்களுக்கு மாத்திரம் அல்லாமல் வேறு வாகனங்களில் வருவோர் மற்றும் வீதியில் செல்வோருக்கும் ஆபத்து இருப்பதை அவர்கள் உணர வேண்டும். ஆனால், வேகத்தை குறைக்கச் சொன்னால் சில ஓட்டுனர்களுக்கு கோபம் வருவதையும் பார்த்திருக்கிறோம்.

அத்துடன் அகால நேரப் பயணமும் தவிர்க்கப்பட வேண்டும்.

திரும்பத்திரும்ப இந்த விடயம் குறித்து எழுதுவதால் இது ஒரு புலம்பல் போலவும் தென்படலாம். ஆனால், தேவையானது வேகக் குறைப்பு, நிதானம். அதுவே பெரும் மாற்றத்தைத் தரலாம்.

விபத்தில் பலியானவர்களுக்கு எமது அஞ்சலிகள்.
அன்புடன்


சீவகன் பூபாலரட்ணம்




# சூடான காலம் : பாம்புகள் கவனம்!

வீட்டில் உள்ளவர்கள் விழிப்பாக இருக்கவும். (பெற்றோர்கள் அசட்டையாக இருக்க வேண்டாம்)

துறைநீலாவணையில் வீட்டுக்குள் நுழைந்த வழலைப்பாம்பு நித்திரையில் படுத்து உறங்கிய யுவதிமீது தெய்வாதீனமாக பட்டு யுவதி மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலையில் உடனடியாக அனுமதித்து யுவதி உயிர் காப்பாற்றப்பட்டார்.



அதிக வெப்பநிலை காரணமாக பாம்புகள் குளிர்ந்த இடங்களை(வீடுகளை) தேடும் காலம் இது

பாதுகாத்துக்கொள்வதற்காக

உங்கள் வீடுகளுக்குள் நுழையும் கதவு,யன்னல்கள்,சுவர்களில் ஓட்டைகள் இருந்தால் அவதானிக்கவும்.ஓட்டைகளை அடைத்து விடுங்கள்.
1. நீண்ட நேரம் ஜன்னல்கள் திறக்கப்படுவதை தவிர்க்கவும். நாக பாம்பு மற்றும் சில பாம்புகள் மிக உயர்ந்த உயரத்தை எட்டும்.

2. மாலை வேளைகளில் உங்கள் வீட்டு முன், பின் கதவுகளை திறந்து வைப்பதை தவிர்க்கவும். இந்த ஊர்வன முற்றிலும் அமைதியாகவே நடமாடுவதால் அதன் ஓசை உங்களுக்கு கேட்காமலே உங்கள் வீட்டிற்கு உள்ளே செல்லலாம்.

3 குளிர்ச்சியான நிழல் கொண்டிருக்கும் மரத்தின் கீழ் உட்கார்ந்திருப்பதற்கு முன்னர், கிளைகள் மீது பாம்புகள் உள்ளனவா என்று பார்த்துக்கொள்ளுங்கள்.

4.படுக்கைக்குச் செல்வதற்கு முன்பு கட்டிலைச் சுற்றி பரிசோதித்துக் கொள்ளுங்கள். போர்வைகளுக்குள் பாம்புகள் பதுங்கியிருக்க வாய்ப்பு அதிகம்.

5. வீட்டுக்கு வெளியே மாலை நேரங்களில் பாய்கள் மற்றும் கட்டில்களை போட்டு தூங்கும் பழக்கத்தை தவிர்க்கவும். மாலையானதுமே கொடிய விஷம் கொண்ட பாம்புகள் வேட்டையாட வெளியேறுகின்றன.

6. பாம்புகள் மட்டுமல்ல பூரான், தேள், நட்டுவக்காலி போன்ற விஷ ஜந்துக்களும் இரவிலேயே நடமாடும்.

7. உங்கள் வீட்டை சுற்றியுள்ள புதர்களை அகற்றி சுத்தப்படுத்துங்கள். கொடிய பாம்புகள் விரும்பி உன்னக்கூடிய எலி போன்றவை புதர்களில் பதுங்கி கிடக்கின்றன.

8. பாம்பு விரட்டும் தூள் வாங்கி அதை உங்கள் வீட்டை சுற்றியுள்ள முற்றத்தில் தூவிவிடுங்கள்.

### விஜயரட்ணம் விஜய்

அது உங்கள் வீட்டிற்குள் பாம்புகள் நுழைவதனை 90% குறைத்துவிடும். உங்கள் வீடுகளில் நுழைந்த பாம்புகளை கொல்லும் போது (சில பாம்புகள் எளிதில் கொல்லப்படலாம்) மிகவும் கவனமாக இருங்கள்.

எனவே மிகவும் பாதுகாப்பாக இருங்கள். அதிக வெப்பத்தின் காரணமாக பதுங்க இடம் தேடும் பாம்புகள் அதிக கோபம் கொண்டிருக்கும்.

தொடர்ச்சி...

## மஹியங்கனை விபத்தில் இறந்தவர்களின் இறுதி நிகழ்வுகள்

50),மருமகன் கலிஸ்டன்(வயது-34), மகள் நிஷாலின்(வயது-28), பேரப்பிள்ளைகளும் இரட்டைக் குழந்தைகளுமான ஹனாலி(வயது-3), பைஹா(வயது-3) ஆகியோரே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளார்கள்.

இவர்களது இறுதி நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

வேன் ஓட்டுனருக்கு நித்திரை ஏற்பட்டு, பாதையில் பிழையான பக்கத்தால் பயணித்தால் குறித்த விபத்து இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

அதேவேளை, நாடு பூராவும் கடந்த புதுவருட தினத்தை ஒட்டிய 5 நாட்களில் ஏற்பட்ட வாகன விபத்துக்களில் 42 பேர்வரை உயிரிழந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி...

## கல்முனை வடக்கு பிரதேச செயலக...

செயற்பட்டுவருதாக அறிகிறோம். தங்கள் அரசியல் சுயலாபத்திற்காக மக்களை பலிக்கடாவாக்கிவருகிறார்கள். இதனைத்தடுப்பதில் அவர்களுக்கு என்ன லாபம்? குறித்த செயலகம் தனித்து ஒரு இனத்திற்கானது மட்டுமல்ல மாறாக மூவின மக்களுக்கானதாகும். எனவே இது விடயத்தில் சகலரும் ஒருமித்து தீர்வுகாணவேண்டும். உண்மையில் தலைவர்கள் இதயசுத்தியாகச் செயற்பட்டால் கல்முனையை மற்றுமொரு கொழும்பாகவோ காத்தான்குடியாகவோ மாற்றமுடியும். இனிமேல் கலவரம் போராட்டம்
முரண்பாடு என்பன முற்றாக தவிர்க்கப்படவேண்டும். யாரென்றாலும் ஏட்டிக்கு போட்டியாக செயற்பட்டு ஐக்கியமாக இருக்கின்ற மக்களைக் குழப்ப வேண்டாம்.

மிதவாதத்தலைவராக இருக்கின்ற அமைச்சர் ஹக்கீம் இதில் தலையிட்டு இரு இனங்களும் நிம்மதியாக சந்தோசமாக சகோதரத்துவத்துடன் வாழ வழி வகுக்கவேண்டும்.' என்றார்.

# அக்கினி புலையவெளி உணவு உற்பத்திப் பொருட்கள்


AGNI PULAYAVELY INDUSTRIES

- சுவையான மரவள்ளிப் பொரியல்
- சுவையான மிக்சர்

ஆகியன தற்போது எம்மால் விற்பனை செய்யப்படுகின்றன. தேவையானவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல:- 0771516203

விலாசம் : அக்னி உற்பத்திகள், பதுளை வீதி, புலையவெளி, செங்கலடி. மட்டக்களப்பு



## மரவள்ளிக் கிழங்குச் சீவல்

100 கிராம் 60 ரூபாய்

200 கிராம் 120ரூபாய்



## மிக்சர்

1 கிலோ 300ரூபாய்

எம்மிடம் இருந்து இந்த உற்பத்திப் பொருட்களைப் பெற்று விற்பனை செய்ய விரும்புவோர் விலையைப் பேசித் தீர்மானிக்கலாம்.

கொள்வனவு செய்யப்படும் அளவினை பொறுத்து மட்டக்களப்பிற்கு உட்பட்ட பகுதிகளில் கொண்டுவந்து விநியோகிக்கப்படும்.

(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)

Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa and Printed at Express News Papers (Cey) Ltd